பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 24 | ஞாயிற்றுக்கிழமை | (07-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 79

SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
Email-del-smsk@eureka.lk

# புலிகளின் தலைமை கருணாவை நீக்கியது

## பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிப்பு

(பத்திரிகையாளர் மாநாட்டில் இருந்து நமது செய்தியாளர்கள்)

**தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமான சில தீயசக்திகளது தூண்டுதலின் பேரில் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதியாக இருந்த கேணல் கருணா தமிழீழத் தேசியத் தலைமைக்கும் தமிழீழ மக்களுக்கும் துரோகமிழைத்து தனியாகப் பிரிந்து செல்ல முற்பட்டுள்ளார். இதனால் அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தும், அவரது பொறுப்புக்களில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார். தற்போது மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதியாக ரமேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் இம் முடிவினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுக்காலை கிளிநொச்சி அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்ற விசேட பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில்

(12ஆம் பக்கம் பார்க்க)



## அரசியல்துறைப் பொறுப்பாளரை கருணாவும் நியமித்துள்ளாராம்

## பி.பி.ஸி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக கரிகாலனை கருணாஅம்மான் நியமித்துள்ளார் என தமிழ் ஒன்றிணைப்பு மன்றம் என்ற பெயரில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மட்டு.அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதியாக இருந்த கருணாவை விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தும், பொறுப்புக்களில் இருந்தும் நீக்கியுள்ளதாக நேற்று விடுதலைப் புலிகளின் தலைமை அறிவித்ததையடுத்தே கரிகாலனின நியமனத்தைக் கருணா செய்துள்ளதாக பி.பி.ஸி.தெரிவித்துள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இயங்கிவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல் துறை, நீதிமன்றம் ஆகியன மூடப்பட்டு அங்கு கடமையாற்றியவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அமைப்பில் வகித்த பதவிகளை கைவிடமாட்டேன்

## பி.பி.ஸிக்கு கருணா தெரிவிப்பு


(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை தன்னை இயக்கத்தில் இருந்து நீக்கியுள்ள போதும் தான் இயக்கத்தில் வகித்த பதவி, பொறுப்புக்களை விட்டுச் செல்லப்போவதில்லை என்று கருணாஅம்மான் தெரிவித்திருப்பதாக நேற்றிரவு பி.பி.ஸி அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்த தளபதியாக இருந்த கருணா அம்மான் விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமையகத்தின் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை அடுத்து அவரை இயக்கத்தில் இருந்து நீக்குவதாகவும், அவரது பதவி, பொறுப்புகளை நீக்கியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர். இதனையடுத்தே அவர் மேற்கண்டவாறு பி.பி.ஸிக்குத தெரிவித்துள்ளார். (ம)



தமிழ் மக்களின் குரல் ஒன்றாக ஒலித்திட...



X

1

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு க.சுரேஷ் பிரேமச்சந்திரன்



யுத்தம் விழுங்கிய பூமியில்
நித்தம் வதைபடும் மக்களுக்காக!
உயிராயுதமாக அல்ல
அறிவாயுதமாக மாறுவோம்!
வீணைக்கே உங்கள் வாக்குகள்!!!



X

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(8504)

# இலங்கையின் அரசியல் நிர்வாகம் எதிர்காலத்தில் அடிக்கடி ஸ்தம்பிக்கும்

## அரசியல் யாப்பை மாற்றாதவரை நாட்டுக்கு விமோசனம் இல்லை என்கிறார் அரசியல் ஆய்வாளர் அன்வர்லதீப்

(கொழும்பு)

**மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வரும் எந்த வொரு அரசையும் தனது அதிகாரத்தால் கலைத்துவிடக் கூடிய ஜனாதிபதி முறைமையை மாற்றுவதற்கு பெரும்பான் மையான மக்கள் ஆதரவு அவசியம் என சிரேஷ்ட சட்டத் தரணியும் அரசியல் ஆய்வாளருமான அன்வர்லதீப், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்டு வரும் 'விடியும் வேளை நிகழ்ச்சித் தொடரில் கலந்து கொண்டு தன் கருத்துக் களைப் பரிமாறிக் கொண்டபோது தெரிவித்துள்ளார்.**

தொடர்ந்தும் கருத்துத்தெரிவித்த அவர்,

1978 ஆம் ஆண்டில் ஜனாதிபதி யாக இருந்த ஜே. ஆர். ஜெய வர்த்தனா தனது அதிகாரத்தைத் தக்கவைக்க வேண்டும் என்பதற் காகவும் தனது கட்சி தொடர்ந்தும் ஆட்சியில் அமரவேண்டும் என்ப தற்காகவும் முன்வைத்து நிறை வேற்றிய 17 வது அரசியல் யாப் புத் திருத்தச் சட்டத்தின்படி இலங் கையின் அரசியல்ஆட்சி அமைப்பு 3 பெரும் கூறுகளாக அமைக்கப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் மக்களின் ஆணையைப் பெற்று பாராளுமன் றம் செல்லும் அரசாங்கம் மக்களிற் கான தேவைகளைப் பூர்த்தி செய் யக்கூடிய சட்டங்களை இயற்றி அதைப் பெரும்பான்மை உறுப்பினர் களின் ஆதரவுடன் சட்டமாக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

இவ்வாறாக உருவாக்கப்படும் சட்டங்களை பிரயோகிக்கும் அதி காரம் ஜனாதிபதியிடம் காணப் படும்.

இந்தச் சட்டங்களின் தனித்து வத்தைப் பேணும்சக்தி நீதித்துறைக் குக் காணப்படும்.

இவ்வாறு இலங்கையின் ஆட்சி முறை மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கப்பட்டு அதிகபட்சமான நிறை வேற்று அதிகாரம் ஜனாதிபதியி டம் காணப்படுகிறது.

இதனால் பாராளுமன்றம் செல் லும் எந்த ஒரு அரசாலும் எத்த கைய தீர்மானங்களையும் எடுக்க முடியாது. என்னதான் பகீரதப் பிர யத்தனங்களில் அரசாங்கம் ஈடு பட்டாலும்ஜனாதிபதியின் தீர் மானத்திலேயே அதன் ஆயுட்காலம் தங்கியுள்ளது. இதனால் ஜனாதி பதி தான் நினைத்தவேளையில் அரசின் முக்கிய அதிகாரங்களைக் கைப்பற்றவோ ஆட்சியைக் கலைக் கவோ முடியும்.

இதனை மக்கள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுவே இலங்கை யின் 17 வது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டப்படியான தீர்மானம்.

மக்களின் அதிகபட்ச பெரும் பான்மை ஆணையுடன் ஆட்சி அமைக் கும் அரசிற்கு உள்ள அதிகாரங் களை மீறும்நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும் என்பதே பெரும் பாலானோரின் அவா.

1978 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, , சட்டவாக்க அதிகாரங்களையும் நிறைவேற்று அதிகாரங்களையும் தான் வைத்திருந்து அரசியலை ஆட்டிப்படைப்பதற்காகசெய்த இந்த அரசியல் யாப்பினாலேயே,

ஒரு கொள்கையுடைய ஜனாதி பதியும் அவருடைய கட்சியும் நிறை வேற்று அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் பேறு இவர்களின் கொள்கையுடன் முரண்பட்ட கொள்கை களைக் கொண்ட ஒரு கட்சி அமைக் கும் சந்தர்ப்பங்களில் பெரும் அர சியல் நெருக்கடிகளும் குழப்பங் களும் உருவாகிவருகிறது. எனவே, இத்தகைய குழப்பங்களை உரு வாக்கும் அரசியல் யாப்பு திருத் தப்படுதல் அவசியம்.

இது திருத்தப்படாது இருக்கு மானால் எதிர்காலத்திலும் அரச நிர்வாகம் அடிக்கடி ஸ்தம்பிக்கும் சூழ்நிலை உருவாகும் அபாயம் உண்டு.

நாட்டின் அரசியல் அமைப்பை மாற்றும் சக்தி மக்களின் கையி லேயே உண்டு. மக்களின் ஆதரவு கிடைத்தால் மட்டுமே இவ் யாப் பினை மாற்றி அமைக்க முடியும். மக்களால் வழங்கப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவே இம்மாற்றத்தைத் தீர்மானிக்கும். மக்கள் தரும் அதிகாரமே எந்த வொரு கட்சிக்கும் அரசியல் யாப்பைத் திருத்தி அமைக்கும் சக்தியை உருவாக்கம்.

இவ்வாறு உருவாக்கப்படும் புதிய திருத்த அரசியல்யாப்பு மக் களின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட பிறகே இது சட்டமாக்கப்பட வேண்டும் என்றார்.

ஜனாதிபதி முறைமையை ஒழிப் பது என்ற கொள்கையை தமது கட்சிஒருபோதும்ஏற்காது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உறுதியாகத் தெரிவித்துள்ளமை பற்றிக் கருத் துத் தெரிவித்த அன்வர்லதீப்,

1994 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 6 ஆண்டு காலம் ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் அரசியல் யாப்பு அமைச் சராக ஜி.எல்.பீரிஸ் இருந்து வந் தார். இதன்போது நாட்டின் இனப் பிரச்சினை குறித்த முழுப் பொறுப் புக்களையும் ஜனாதிபதி அவரி டம் வழங்கியிருந்தார்.

இக்காலத்தில் அரசியல் யாப் பின் மூலம் இனப்பிரச்சினைக் குத் தீர்வை ஏற்படுத்தமுடியாது என அவர் கைவிரித்தார்.

பின்னர் ரணில் அரசின் ஆட் சிக்காலத்திலும் அமைச்சர் பத வியை வகித்த பீரிஸ் இனப்பிரச் சினைக்குத் தீர்வைஏற்படுத்த வேண் டும் எனில் அது அரசியல் யாப் பின் அமைப்பிலேயே தங்கியுள் ளது என கருத்துத் தெரிவித்தி ருந்தார்.

இத்தகைய முன்னுக்குப் பின் முரண்பாடுடைய கருத்துக்களைக் கூறிவரும் பீரிஸ் போன்றவர்களு டைய கருத்தை ஒருபோதும் ஏற் றுக்கொள்ளக்கூடாது இவரின் எண் ணப்படி ஜனாதிபதி முறைமையை ஒழிக்காதிருத்தால் நாட்டில் தொடர்ந் தும் அரசியல் இழுபறிகள் தொட ரும் இதன்மூலம் இனப்பிரச்சினை களுக்குத் தீர்வுகாணமுடியாது.

இத்தகைய முரட்டுக்கொள்கை யுடைய பீரிஸ் மக்களுக்கு அரசி யல்துரோகம் செய்யாது அரசிய லில் இருந்து விலகிக்கொள்வதே ஏற்புடையது எனக் குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தல் நெருங்கிவ ரும் இச் சூழ்நிலையில் இடம் பெற்றுவரும் அரசியல் படுகொலை கள் தொடர்பாகக் கருத்து வெளி யிட்ட அவர்,

ஜனநாயக ஆட்சியில் கருத்து முரண்பாடுள்ள கட்சிகள் அங்கம் வகிக்கும் போது தான் ஜனநாய கம் ஸ்திரமானதொன்றாகப் பேணப்படும் இதனாலேதான் ஆழும் கட்சிக்கு ஒரு எதிர்க்கட்சி பாராளு மன்றத்தில்கூட அமைந்துள்ளது. இப்படியிருப்பதால் தான் ஒருகட்சி தனக்கெதிரான மாற்றுக்கட்சி தன் மீதுள்ள குறைபாட்டைச் சுட்டிக் காட்டிவிடக்கூடாது. என்பதற்காக நேர்மையுடன் நடந்துகொள்ளும்.

இந்த மாற்றுக்கருத்தினை யார் நிராகரிக்கிறார்களோ அவர்கள் ஜனநாயகத்திற்குப் புறம்பான சக் திகள் மீது நம்பிக்கை கொண்ட சர்வாதிகாரிகள் ஆவர் என்றார்.

(உ-60,4)

# சமாதானத்தை எம்மண்ணில் நிலைநிறுத்த மிக அவதானமாக வாக்களியுங்கள்

## யாழ்.ஆயர் மக்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

வாக்குகளை அளிக்கும்போது நீதியோடும் நேர்மையோடும் தேசிய நலனை கருத்தில் கொண்டு தகுந்த பிரதிநிதிகளை தெரிவுசெய்யவேண் டிய கடமையை தமிழ் மக்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. சமாதானத்தின் பாதையை முன்னெடுத்து செல்லும் ஆணையை தெரிவுசெய்யப்பட்ட அரசிற்கு வழங்க மக்கள் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தவேண்டும். யுத்தத்தை வெறுத்து சமாதானத்தை மீளக் கொண்டுவரும் தமிழ் மக்களின் விருப்பம் இத் தேர்தல் மூலம் தெளிவாக தெரியப்படுத்தப்பட வேண் டும். தூர நோக்குடனும், துணிவுட னும் நாம் செயல்பட்டால் தான் எமது நாளைய உரிமைகளை நாம் சுதந்திரமாகப் பயன்படுத்த முடியும்.

13வது தேர்தல் பற்றி யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் மேலும்,

தமிழ் மக்கள் நீண்டகாலமாக அனுபவித்துவந்த போரும் அதன் விளைவுகளும் அகன்று அமைதி யும் மகிழ்ச்சியும் நிலவிய 'வேளை யில் இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடும் அதன் உச் சக்கட்டமான அரசியல் ஸ்திரமற்ற நிலையும் எம்மை மீண்டும் ஒரு தேர்தலை இரண்டு ஆண்டுகளுக் குள் எதிர்கொள்ள வைத்துள்ளது. 2004ஆம் ஆண்டு நடைபெற விருக் கும் 13வது பொதுத்தேர்தல் தமிழ் மக்களை பொறுத்தவரை மிக முக் கியமானதொரு தேர்தலாகும்.

1977ஆம் ஆண்டு இதே போன்ற தொரு முக்கிய நிலைமையைத் தமிழ்மக்கள் எதிர்நோக்கியிருந் தார்கள். தமிழீழம் என்பதே தமிழ் மக்களின் ஒரே முடிவு என்பதை வெளிக்காட்ட தமிழ் மக்கள் அனை வரும் ஒன்றிணைந்தமையால் அர சைத் தீர்மானிக்கும் வல்லமையை யும் எதிர்க்கட்சியாக அமரும் ஒரே யொரு வாய்ப்பையும் அப்போ பெற்றி ருந்தார்கள் போரை அல்ல. தமிழ் மக்கள் அனைவரும் அமைதியை யும் சமாதானத்தையுமே விரும்பு கிறார்கள் என்பதை முழு உல கிற்கும் வெளிக்காட்ட தமிழ் மக் கள் அனைவரும் ஒன்றிணைந்தால் இத்தடவையும் மீண்டும் ஒருமுறை ஒரு சரித்திரம் படைக்கமுடியுமென நம்புகிறோம்.

இந்நிலையில் தமிழ்க்கட்சிகள் பல ஒன்றிணைந்துள்ள இத்தேர்தல் மிகவும் முக்கியமானதாகும். தமிழ் மக்கள் எல்லோரும் சமாதானத்தை எம்மண்ணில் நிலைநிறுத்த ஒன்றி ணைய வேண்டும் என்ற நீண்டகால எதிர்பார்ப்பின் பின்னணியில் இந்த ஒன்றிப்பு தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என எதிர்பார்க்கிறோம்.

சுதந்திரமாக வாக்களிப்பது எல்லா மக்களுக்குமான ஒரு ஜனநாயக உரிமையாகும் இந்த உரிமையை உரியவிதாமகப் பயன்படுத்த வேண் டிய கடமை எல்லோருக்கும் உண்டு.

அரசாங்க கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக் கும் தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டிய உரிமையை வழங்க அரசு எல்லாவித முயற்சியையும் எடுக்க வேண்டும் என வேண்டு கோள் விடுக்கின்றோம்.

எதுவித வற்புறுத்தலும் இன்றி சுதந்திரமாக மக்கள் வாக்களிக் கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப் படவேண்டும். அதிகார துஷ்பிர யோகம், ஆள்மாறாட்டம், அரசி யல் வன்முறை, பயமுறுத்தல், கள்ளவாக்குப் போன்ற தவறான செயல்கள் நடைபெறாமல் இருப் பதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். தேர்தலில் வாக்களிக் காதிருத்தல் சரியான மனத்தெளி வின்றி வாக்களித்தல் முறையற்ற வாக்களித்தலில் பங்குகொள்ள முற்படல் என்பன எல்லாம் ஜன நாயகத் தேர்தல் வழிமுறைகளுக்கு ஒவ்வாதவை.

வாக்குகளை அளிக்கும்போது நீதியோடும் நேர்மையோடும் தேசிய நலனை கருத்தில் கொண்டு தகுந்த பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதால் தமிழ்மக்கள் மீள ஒரு தடவை ஒன் றிணைந்து சரித்திரம் படைக்கவும் சமாதானத்திற்கான தம் தெரிவினை தெளிவாக வெளிப்படுத்தவும் இறை யாசி வேண்டுகிறோம் என்றுள் ளது.

(உ)

# நாட்டை அபிவிருத்தி செய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் அரசாங்கத்திற்கு இரு முக்கிய



கடப்பாடுகள் இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

பம்பலப்பிட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஐக் கிய தேசிய முன்னணியின் தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிர தமர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,


தற்போதைய சமாதான முயற் சிகளை முன்னெடுத்துச் செல்வ தும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுமே ஆட்சிப்பொறுப்பை ஏற்கும் அரசாங்கத்திற்கு இருக் கும் முக்கிய கடப்பாடுகள் என்று சுட்டிக்காட்டிய பிரதமர்,

ஐக்கியதேசிய முன்னணி அர சாங்கம் நாட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த நடவ டிக்கை மேற்கொண்டது.

அத்துடன், மக்களுக்கு போலி யான வாக்குறுதி அளிப்பதைவிட அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலமே நாட்டை அபிவிருத்தி செய் யலாம் என்று கூறினார்.

மேலும், ஐக்கியதேசிய முன் னணி அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு யுத்தத்தை நிறுத்தி பொருளாதார வளர்ச்சியை ஏற் படுத்தியிருக்கிறது என்று குறிப் பிட்டார்.

(உ-02)









காமராஜர் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர் திருமதி பிரபாரெட்டி தலைமையிலான் குழுவினர் இணைந்து அண்மையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் அழகுக்கலை பற்றிய பயிற்சி வகுப்பினை நடத்தினர். அந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-க.தேவகுமார்)

# பாடசாலை தவணை விடுமுறைகள்

2004 ஏப்ரல் மாதத்தில் நடாத்தப்படவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு ஏப்ரல் மாதம் முதலாம் வாரத்தில் நடாத்தப்படவிருந்த க.பொ.த(உ/த) பரீட்சையினை ஒத்திப்போடவேண்டி ஏற்பட்டமையால், 20.10.2003 ஆம் திகதிய 2003/31 ஆம் இலக்க பாடசாலைத் தவணை விடுமுறைகள் பின்வருமாறு மாற்றத்திற்குட்படுத்தப்பட்டுள்ளன,

## சிங்கள தமிழ்ப் பாடசாலைகள்

க.பொ.த(உ/த) பரீட்சை நிலையங்களாக ஈடுபடுத்தப்படாத பாடசாலைகளின் பொருட்டு,

**1ம் தவணை:** 05 ஜனவரி 2004 திங்கள் முதல் 30 மார்ச் 2004 செவ்வாய் வரை (இரு நாட்களுட்பட)

**2ம் தவணை:** 27 ஏப்ரல் 2004 செவ்வாய் முதல் 06 ஆகஸ்ட் 2004 வெள்ளி வரை (இரு நாட்களுட்பட)

**3ம் தவணை:** 01 செப்ரெம்பர் 2004 புதன் முதல் 10 டிசம்பர் 2004 வெள்ளி வரை (இரு நாட்களுட்பட)

## க.பொ.த(உ/த) பரீட்சை நிலையங்களாக ஈடுபடுத்தப்படுகின்ற பாடசாலைகளுக்கு

**1ம் தவணை:** 05 ஜனவரி 2004 திங்கள் முதல் 30 மார்ச் 2004 செவ்வாய் வரை (இரு நாட்களுட்பட)

**2ம் தவணை:** 1ம் கட்டம் - 19 ஏப்ரல் 2004 திங்கள் முதல் 30 ஏப்ரல் 2004 வெள்ளி வரை (இரு நாட்களுட்பட)

IIம் கட்டம் - 03.06.2004 புதன் முதல் 20.08.2004 வெள்ளி வரை (இரு நாட்களுட்பட)

**3ம் தவணை:** 30 ஆகஸ்ட் 2004 திங்கள்முதல் 10 டிசம்பர் 2004 வெள்ளி வரை (இரு நாட்களுட்பட).

(உ-3)


# இது உண்மையின் குரல்



''இந்தப் பிரதேசத்தை நான் நன்கு அறிவேன். பத்து வருடங்கள் நீங்கள் தொடர்ச்சியாகப் போரிட்டாலும் பளைப் பிரதேசத்தை உங்களால் பிடிக்க முடியாது என்பதை எச்சரிக்க விரும்புகின்றேன். ஆனையிறவை மீண்டும் நெருங்க முடியும் என்று நீங்கள் நினைத்தால், அது வெறும் பகற்கனவாகவே முடியும்''

என சிங்கள பேரினவாத சக்திகள் முன்னில் பாராளுமன்றில் துணிந்து குரலெழுப்பிய ஆனந்தசங்கரி அவர்கள் எப்படி ஆனையிறவை மீண்டும் இராணுவத்திடம் கையளிக்க வேண்டுமென கூறியிருப்பார்.... இது திரு.அ.விநாயகமூர்த்தி அவர்களின் விசம பிரசாரம் என்பதே உண்மை.


4

சிந்தியுங்கள்... எது போலி, எது நிஜம் என்று...

பூட்டு சின்னத்திற்கு வாக்களித்து

வீ.ஆனந்தசங்கரி அவர்கள் தலைமையிலான

**சுயேச்சைக் குழு: 01**



X

(C7412)

**02.04.2004ல் வெற்றியை உறுதி செய்வோம்**

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## மூன்றாம் பகுதி

66

## திருகோணமலைத் தமிழரின் வழமைகள்

### 1.திருகோணமலை வன்னியரும் கோணேசர் கோயில் வழமைகளும்

கோணேசர் கோயிலிலே திருப்பதியம் ஓதும் வழமை காணப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளைக் கோணேசர் கல்வெட்டு மேல்வருமாறு வர்ணிக்கின்றது.

"செகராசரடி பரவு திருக்குளக்கோட்டு மகாராசன் காஞ்சிபுர சிவாலயத்திற்குச் சென்று சிவதரிசனம் செய்து துதி செய்து நிற்குந் தருணத்தில் தெய்வப் புலவன் சுவாமி திரு முன்னிலையினின்று சிவதோத்திரங்கள் ஓதுகின்ற இராகப் பண்ணையும் ஆசாரவலங்காரத்தையும் கண்டு தெய்வப்புலவனைப் பார்த்து உன் வங்கிஷத்தில் ஒரு பிள்ளை தரவேண்டும் என்று கேட்கத் தெய்வப்புலவனும் அரசனுடைய பாதத்தில் வீழ்ந்து நமஸ்காரம் பண்ணித் தேவரீர் அடியேனை ஒரு பிள்ளை தரச் சொல்லிக் கேட்டது என்ன காரியத்திற்கென்ன, இலங்காபுரியிலே திரிகயிலைநாதர் திருவாலயத்திற்கு முன்னின்று நாதகீதத்துடன் சில தோத்திரம் ஓதுவதற்காகவென்று அரசன் சொல்ல மிகவும் சந்தோஷப்பட்டுத் தன்குடியில் ஒரு குடித்தனம் அமைத்துக் கொடுக்க அவர்களுடன் அரசன் திரிகயிலைக்கு வந்து நித்தியமும் சிவாலயத்துக்கு முன்னே நாதகீதம் பாடத்திட்டம் பண்ணி, பள்ளவெளியில் இரண்டவணவிரைப்புத் தரையும் கொடுத்து, கொட்டியாபுரத்திலே சமுத்திரக் கரை அருகாக, ஒரு கிராமத்தை நல்லதே என்று கேட்கப் புலவனும் பார்த்து நல்லவூர் அடியேனுக்குச் சம்பூரணம் என்ன அரசனும் மகிழ்ந்து அந்தவூருக்குச் சம்பூரென்று பேரிட்டு, எந்தக் காலத்துக்கும் உன் குடியின் மனுசருக்குப் பரவணியாகத் தந்தோம் என்று, செப்புக் கம்பை போட்ட பத்ததியும் கொடுத்து, கோயிற்றிருவாசகப் புலவனென்று அரசனுரை நிறுத்தியது. அரசன் கூட்டிவந்த தெய்வப்புலவன் திருநாமம் சிவசித்திர பெருமாள் புலவன்"

திருவாசகப் புலவனைப் பற்றிய விபரங்கள் தானம், வரிப்பத்து முதலிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களைப் பற்றியனவற்றைப் போன்றனவாகும். தேவார திருவாசகங்களை ஓதுவதற்கென்று ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அது அரசனாகிய குளக்கோட்டனாலே செய்யப்பட்டது என்றும் சொல்லப்படுகின்றது. ஓதுவாருக்குத் திருவாசகப்புலவன், பெருமாள்புலவன் என்ற சிறப்புப் பெயர்கள் இருந்தன. அதற்குரியவர்களின் பூர்வீகம் காஞ்சிபுரத்தோடு தொடர்புடையது. பெருமாள் புலவனுக்குக் குடியிருப்பதற்குச் சம்பூரிலே காணி வழங்கப்பெற்றது. சீவிதமாக நெற்காணிகள் பள்ள வெளியிலே கொடுக்கப்பட்டன. பெருமாள் புலவனைப் பற்றிய விபரங்கள் பெரும்பான்மையும் ஆதாரபூர்வமானவை. அவை வழமைகளையும் அவற்றைப் பற்றிய ஐதிகங்களையும் அடிப்படையாகக் கொண்டவை இவ்விதமான ஏற்பாடுகள் அநேகமானவை சோழப் பெருமன்னர் காலத்திலே தமிழகத்துக் கோயில்களில் இருந்தமை கவனித்தற்குரியது.

கோயிற்றிருப்பணிகளைச் செய்வதற்காகச் சோழதேசத்தில் இருந்து, மாந்தையம்பதியார், அக்கசாலைத் தலைவர்கள் முதலியோரையும் அழைத்து வந்து குளக்கோட்டன் குடியிருத்தினான் என்று சொல்லப்படுகின்றது. திருக்கயிலாய மலையிலுள்ள கோயில்கள், மதில்கள், படிக்கட்டுகள், பாவநாசச் சுனை, கந்தளாய்க்குளம் ஆகியன தொடர்பான கட்டிட வேலைகளைச் செய்வது இவர்களின் பொறுப்பாகும். அவர்களுக்கும் சீவிதமாக விளை நிலங்கள் வழங்கப்பட்டன.

கோணேசர் கோயில் சமுதாயப் பிரிவுகளோடும் சமுதாய நிறுவனங்களோடும் கொண்டிருந்த தொடர்புகளையே கோணேசர் கல்வெட்டு வர்ணிக்கின்றது. அத்தொடர்புகள் நெடுங்கால வழமைகளினால் நெறிமுறையானவை. ஆலயம் தொடர்பாக வன்னிபங்கள், தானத்தார், வரிப்பத்தார், கம்மாளர் முதலியோர் செய்யவேண்டிய கடமைகள் என்று சொல்லப்படுவன பெரும்பான்மையும் வழமைகளின் அடிப்படையிலே விபரிக்கப்படுகின்றன. சேவைகள் எல்லாம் நிலமானியங்களோடு பந்தமானவை. சேவைகளுக்கென வழங்கப்பெற்ற நிலங்கள் திருகோணமலைப் பிராந்தியத்து வன்னிமைகள் எல்லாவற்றிலும் பரந்து காணப்பட்டன. நிலமானியங்களைப் பெற்றவர்களின் குடியிருப்புகளும் பரந்து காணப்பட்டன.

நிலங்களைப் பெற்றிருக்காத குடியானவர்கள் உற்சவகாலங்களிலே கோயிலிற் புரிந்த சேவைகள் வேறொரு வகையானவை. கட்டுக்குளம் பற்றில் வாழும் குடிகள் கோயிற்றொழும்புகள் செய்வது வழமை. நிலாவெளியில் உள்ளோர் முன்னீடு பெற்று விழாக்களை நடத்துவர்.

ஆறவணம் நெல்லு, அடை, ஆயம், தீர்வை, சுங்கம் முதலானவற்றை அவர்கள் ஆலயத்திற்கு ஒப்படைத்தல் முறை. கோயிற் செலவுகளுக்குத் தேவையான பழம், பாக்கு, வெற்றிலை, பால், தயிர், நெய் ஆகியவற்றோடு ஒரு நூறவணம் அரிசியினையும் கொட்டியாரம் பற்றுக் குடிகள் வழங்குவது வழமை. எண்ணெய் வடிப்பதற்கு வேண்டிய ஆமணக்கு, புன்னை, இலுப்பை ஆகியவற்றை இறையாத் தீவில் வாழும் குடிகள் வழமையாகக் கொடுப்பர்.

### 2.திருகோணமலைத் தமிழரின் வழமைகள்: சிலபிரதான அம்சங்கள்

பிரதம நீதியரசரான அலெக்ஷாந்தர் ஜோன்ஸ்ரன் 1815 ஆம் ஆண்டிலே, ஒல்லாந்தர் அரசாங்கம் தொகுத்துச் சட்டமாக்கிய தேசவழமையின் பிரதிகளைத் தமிழர் வாழும் பகுதிகளில் உள்ள உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தார். தேசவழமைச் சட்டத்தில் உள்ள அம்சங்கள் எந்தளவிற்கு நடைமுறையில் இருந்தன என்பது பற்றி அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டனர். முதலியார், வன்னியர், உடையார், அடப்பனார் முதலிய தலைமைக்காரிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டன. அவற்றின் மூலப் பிரதிகளும், சில சமயங்களில் அவற்றின் ஆங்கில மொழியாக்கப் பிரதிகளும், மாவட்ட அதிகாரிகளினாலே, தங்களுடைய குறிப்புகளோடு கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன அவற்றின் பிரதிகள் அலெக்ஷாந்தர் ஜோன்ஸ்ரன் ஆவணச் சுவடிகள் என்னும் தொகுப்பில் உள்ளன. அவை வரலாற்று ஆவணங்கள் என்ற வகையில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதன் 4 பிரிவுகளாகன திருகோணமலை, தம்பலகாமம், கட்டுக்குளம் பற்று, கொட்டியாரம் பற்று என்பவற்றிலே காணப்பட்ட வழமைகளைக் குறித்து அங்குள்ள தலைமைக்காரர்கள் தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தார்கள். அவ்வறிக்கைகள் மிகவும் சுருக்கமானவை. கலியாணம், சீதனம், சொத்துரிமைகள், மஞ்சணீர்ப் பிள்ளை, நிலங்களைச் செய்கைபண்ணுதல், கடனுக்கு வட்டி செலுத்துதல், அடிமைகள், வன்னியரின் அதிகாரம், கோணேசர் கோயிலுக்குரிய உரிமைகள் முதலானவற்றைப் பற்றிய குறிப்புகள் இந்த ஆவணங்களில் உள்ளன. விபரங்கள் மிகச் சுருக்கமானவை என்பதால் அவற்றை ஆதாரமாகக் கொண்டு சமுதாயத்திற்குப் பொதுமையான சட்டநெறியினை அந்நாட்களில் உருவாக்கிக் கொள்ளமுடியவில்லை. குறிப்புகள் சுருக்கமாய் இருப்பினும் அவை வரலாற்று ஆவணங்கள் என்ற வகையிலே மிகவும் பிரயோசனமானவை. அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை; பிராந்திய வரலாற்றின் சில பிரதானமான அம்சங்களைத் தெளிவுபடுத்தும்பான்மையில் அமைந்தவை.

(தொடரும்)

## ஜாதிக ஹெல உறுமயக்கட்சி லலித் கொத்தலாவல்லவுக்குச் சவால்

(கொழும்பு)

சிலிங்கோ நிறுவனங்களின் தலைவர் தேசமான்ய லலித் கொத்தலாவல எடுக்கும் எந்த சட்டநடவடிக்கைக்கும் தாம் தயார் என ஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளது.

எத்தகைய சட்டநடவடிக்கைகளையும் எதிர்கொண்டு, லலித் கொத்தலாவல சிங்கள பௌத்தர்களுக்கெதிராகவே செயற்படுகிறார் என்பதைத் தாம் நிரூபிப்போம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அததுடன்,, கொத்தலாவலவின் உறுப்பினர்களுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் அங்கத்தவர்கள் எதையும் செய்யவில்லை. ஜாதிக ஹெல உறுமயவினர் ஏற்பாடு செய்யும் கூட்டத்திற்கு வீடியோப் படம் பிடிப்பதற்காக ஏன் தம் ஆட்களை கொத்தலாவல அனுப்பினார் என்பதே புரியாமலிருக்கிறது.

அங்கு நடைபெறுபவற்றைப் பற்றி அறிய விரும்பினால் அதை ஊடகத்துறையினரிடம் இருந்து பெற்றிருக்கலாம் என்று ஜாதிக ஹெல உறுமயவினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பாணந்துறையில் நடைபெற்ற இவர்களின் கூட்டத்திற்கு கொத்தலாவல 2 அலுவலர்களை வீடியோப்படம் பிடிக்க அனுப்பியிருந்தார். கூட்டத்திற்கு வந்தவர்கள் அவர்கள் இருவரையும் தாக்க முயற்சி செய்த வேளையில் பிக்குகளே அவர்களைக் காப்பாற்றினர் என அவர்கள் கூறினர்.

(உ-6)



அண்மையில் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் நடைபெற்ற தையல், மனையியல் கண்காட்சி நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.அடிகேந்திரன் மங்கள விளக்கேற்றுவதனையும்,



கண்காட்சியை காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதனையும் படங்களில் காணலாம்.



நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் செ.சரவணபவா மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் ஸ்ரீ வீரபத்திரக் குருக்கள் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

(படம்: க.விஜயவாசன்)

## இன்று ஒரு தகவல்

# ஆயுளின் எதிர்கள்

மனிதனின் ஆயுள் 100 வருடங் கள் எனறு கூறுகின்றனர். ஆனாலும் நிறையப் பேர் பூரண ஆயுள் வாழுவதாகத் தெரியவில்லையே இது ஒரு சந்தேகம். இதே சந்தேகம் திருதராஷ்டிரனுக்கும் வந்தது. உடனே திருதராஷ்டிரன் விதுரரைப் பார்த்துக் கேட்டான். "ஏன் யாருமே பூரண ஆயுள் வாழ்வதில்லை?" என்று இந்தக் கேள்விக்கு விதுரர் பதில் கூறினார். "ஆறு கூரிய வாள்கள் மனிதனது ஆயுளை அழிக்கின்றன" என்றார்.

அது என்ன ஆறு கூரிய வாள்கள்? இதை அவரே கூறுகிறார். அதிக கர்வம், அதிகம் பேசுதல், கோபம், சுயநலம், நண்பர்களுக்குத்துரோகம், தியாக மனப்பான்மை இல்லாமை இவைதான் ஆயுளை வெட்டக்கூடிய கத்திகள்.

அதிக கர்வம் ஒரு முக்கியமான வாள் தன்னிடம் அதிகப் பணம் உள்ளது. தான் மிகுந்த கெட்டிக்காரன், தன்னால் தான் எல்லாம் நடக்கின்றது. என்றெல்லாம் நினைப்பது தவறு, நான்தான் நல்லவன் மற்ற எல்லோரும் கெட்டவன் என்று நினைக்கும் போது கர்வம் அதிகமாகின்றது. இது நமது அழிவுக்குக் காரணமாக ஆகிவிடும். அதனால் தன் விடயங்களில் குற்றங்களையும், பிறர் விடயங்களில் குணங்களையும் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது அதிகம் பேசுபவன், வீண் வம்பை விலைக்கு வாங்குவான். இது இடைஞ்சலில் கொண்டுபோய் விட்டு விடும். நமது பேச்சு எப்படி இருக்க வேண்டுமென்றால் அதில் கடுமை இருக்கக் கூடாது. உண்மையானதாக இருக்க வேண்டும். பிரியமானதாக இருக்கவேண்டும். நன்மை கருதியதாக இருக்க வேண்டும். அது தான் நல்ல பேச்சு.

மூன்றாவது விடயம். எல்லாவற்றையும் நாம் தான் அனுபவிக்க வேண்டும்மென்ற ஆசை காரணமாகததான் நமக்குத் தியாக மனப்பான்மை ஏற்படுவதில்லை பிறருக்கு உதவத்தான் நாம் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறோம் என்றுணர்ந்தவாகள் தியாக மனப்பான்மை உள்ளவர்கள்.

அடுத்தது கோபம். கோபம் தான் மனிதனின் முதல் எதிரி கோபத்தை வென்றவன் தான் யோகி . அவன் தான் உலகில் சுகப்படுவான் என்பது பெரியோர் வாக்கு. கோபத்தில் இருப்பவனுக்கு தர்மம் எது. அதர்மம் எது என்று தெரியாது அந்த விவேகத்தை இழந்துபாவம் செய்ய ஆரம்பித்து விடுவான் அதனால் கோபப்படாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் கோபப்பட்டால் நாம் அதைச் சகித்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தது சுயநலம். சுயநலம் தான் எல்லாத் தீமைகளுக்கும் காரணம். தமது காரியம் ஆகவேண்டும் என்பதற்காக எந்தப் பாவத்தையும் செய்யத்துணிபவர்கள்தான் சுயநலவாதிகள். அடுத்தவர்களின் சந்தோஷத்தைப் பார்த்து நாம் சந்தோஷப் படவேண்டும். அடுத்தவர்களின் துன்பத்தைப் பார்த்து நாம் வருத்தப்படவேண்டும். இப்படிச் செய்தால் சுயநலம் போய் விடும் என்பது ஆன்றோர் வாக்கு.

ஆறாவது விடயம் நண்பர்களுக்குத் துரோகம. இந்த உலகத்தில் நல்ல நண்பர்கள் கிடைப்பது அபூர்வம். அப்படிக்கிடைககின்றபோது அவர்களுக்குத்துரோகம் செய்ய நினைப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம். நமக்கு யார் மீதும் வெறுப்பு என்பதே இருக்கக் கூடாது. சினேகமனப்பான்மை வேண்டும். கருணையுடன் பழக வேண்டும். ஆயுளை அழிக்கும் ஆறு வாள்கள் என்று பெரியவர்கள் கூறுவது இந்த ஆறு விடயங்களைத்தான். இந்த ஆறு விடயங்களிலும் சிறிது கவனமாக இருந்தால் போதும் வெற்றிகரமான வாழ்க்கை நிச்சயம்.

இந்தக் காலத்து நண்பர்கள் எல்லோரும் எப்படி இருக்கின்றனர் தெரியுமா? "ஒருவன் சொன்னான் இன்று என் நண்பனை அழைத்துக கொண்டு உணவு விடுதிக்குச் சென்று சாப்பிட்டோம் 100 ரூபா செலவு" என்றான். மிகவும் பெருமையாக "அப்படியா?!" என்றேன் நான். இதற்கு அவன் "ஆமாம்! அதற்கு மேலும் செலவு செய்ய எனக்கு ஆசைதான் ஆனால் அது முடியாமல் போய்விட்டது ஏனென்றால் அவனிடம் இருந்ததே 100 ரூபாய் தான்" என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(தொல்புரம்)

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

சகல திணைக்களத் தலைவர்களையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

* * *

கோப்பாய் பிரதேசசெயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல திணைக்களத் தலைவர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (உ-70)

# திறமைசாலிகள் எவரும் அரசியலுக்குள் வருவதில்லை

## ஜனாதிபதி கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் திறமைசாலிகள் எவரும் அரசியலுக்கு வருவதில்லை. சேவை மனப்பான்மை உள்ளவர்கள், மதிப்பிற்குரியவர்கள் எவரும் வருவதில்லை .ஆனால் கொள்ளை அடிக்கும் கூட்டம் மட்டுமே அரசியலுக்குள் பிரவேசிப்பதைக் காணமுடிகிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகை யில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆசிரியர் சமூகம் மற்றும் எழுதுவினைஞர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

நாட்டைப் புதிய பாதையில் இட்டுச் செல்வதற்கு நாம் முதலில் அரசியலைத் தூய்மைப்படுத்த வேண்டும். இதற்கமைய சமூகத்திலும் ஒட்டு மொத்தமான அரசியல் களத்திலும் பாரிய புரட்சியை ஏற்படுத்த வேண்டும்.

பரீட்சைகளில் சித்தியடையாத எதனையும் சந்திக்கமுடியாதவர்கள் அரசியலுக்கு வருவதால் வியாபாரம் மட்டுமே நடைபெறக் கூடியதாக உள்ளது. அரச ஊழியர்களாக கடமையாற்றுபவர்களுக்கு அவர்களுக்குரிய முழுமையான சம்பளம் இது வரையும் கிடைக்கவில்லை.

கடந்த 2 வருட காலத்துக்குள் வாழ்கைச் செலவும் அத்தியாவசியப் பொருட்களுக்கு மட்டும் மூவாயிரம் ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கி மதிப்பிட்டுள்ளது என்று ஜனாதிபதி அங்கு கூறினார். (ம)

## ஐ.ம.சு.முவின் நிலைப்பாட்டினால் முஸ்லிம்கள் விவகாரத்தில் சிக்கல்

### இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் விசனம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் பங்களிப்பு குறித்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாடு சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் வெகுஜனத் தொடர்பு சாதன அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும், கூறுகையில்,

வடக்கு,கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் அவர்களின் எதிர்காலம் குறித்து ஜனநாயக சமூகக் கட்டமைப்புத் தீர்மானம் எடுப்பதற்கு அவர்களுக்கு இருக்கும் பங்களிப்பு மற்றும் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை ஏற்படுத்த டோக்கியோ பிரகடனத்தில் இணக்கம் காணப்பட்டது.

உலகின பலம் வாய்ந்த நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட இந்த இணக்கப்பாட்டை சீர்குலைக்கும் நோக்கம் கூட்டமைப்புக்கு உள்ளதா என்பதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெளிவுறுத்த வேண்டும் என்று தெரிவித்தார். (உ-61,8)

## இராசிபலன்

07. 03. 2004

(மாசி 24, ஞாயிற்றுக்கிழமை)

| | | |
|---|---|---|
| பிரதமை | பின்னிரவு 4.58 | மணி வரை |
| பூரம் | பிற்பகல் 12.33 | மணி வரை |
| இராகுகாலம் | 4.54-6.24 | மணிவரை |
| சுபநேரம் | 9.24-10.54 | மணிவரை |

### சித்தாமிர்தம்

**மேடம்**
தெய்வ சிந்தை, கௌரவக்குறைவு, காரிய தாமதம், மனச்சோர்வு.

**இடபம்**
மனக்கிலேசம், முயற்சி தாமதம், புதிய சிந்தை, தன விரயம்.

**மிதுனம்**
நல்ல காரியம், பிரயாணம், போசன சுகம், உறவினர் வருகை.

**கடகம்**
மாதர் நட்பு, வாக்கு மேன்மை, விவாதம், தன விரயம்.

**சிங்கம**
சயன சுகம், பெரியோர் ஆதரவு, விருந்துபசாரம், முயற்சி கைகூடும்.

**கன்னி**
சயன சுகக்குறைவு, நண்பர்கள் சந்திப்பு, காரிய அலைச்சல், பிரயாணம்.

**துலாம்**
புகழ், எடுத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, கலந்துரையாடல்.

**விருச்சிகம்**
நிலை மாற்றம், கடுமையான பிரயாசை, அதிகாரம், போசன சுகம்.

**தனுசு**
புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, திடீர் நன்மை, முயற்சி தாமதம்.

**மகரம்**
பிரயாண பயம், உறவினர் மனஸ்தாபம், முயற்சி தடங்கல், உடல் நலக்குறைவு.

**கும்பம**
தொழிலில் ஆர்வம், அபூர்வ சந்திப்பு, விருந்துபசாரம், கௌரவமான நிலை.

**மீனம்**
சத்துரு ஜெயம், உடல் நலம், புதிய செயற்பாடு, காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## ஊடகவியலாளர் அமைப்பு பிக்குகள் மீது பாய்ச்சல்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயக் கட்சி சார்பாக போட்டியிடும் பௌத்த பிக்குகள் நடத்தும் தேர்தல் பிரசாரங்களுக்குச் செல்லும் ஊடகவியலாளர்களுக்கு எற்படுத்தப்படும் தடைகள் தொடர்பாக இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

தமது ஊடகத்துறை மீது காட்டும் பொறுப்புணர்வுகளைத் தவிர்க்குமாறு இந்த அமைப்பு பௌத்த பிக்குகளைக் கேட்டுள்ளது.

ஹெல உறுமயக் கட்சியில் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு கண்டியில் இடம் பெற்றவேளை, அங்கு செய்தி சேகரிப்பதற்குச் சென்ற தமது செய்தியாளர்களுக்கு பிக்குகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது. சுதந்திர ஊடகவியலாளர்களில் ஒருவர் பெண் என்றும், அவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்ததையடுத்து பிக்குகள் அவரை தகாத வார்த்தைகளால் பேசியதாகவும் அவ் அமைப்பு கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இவ்வாறாகச் சாதி, மத பேதங்களின் பேரில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்தப்படும் தேர்தல் வன்முறைகளை நிறுத்துமாறும் இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு பௌத்த அமைப்பின் தலைமைப் பிக்குகளை மேலும் வேண்டியுள்ளது. (ச)

## அகில இலங்கைச் சைவ மாநாட்டில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்பபாணம் அகில இலங்கைச் சைவ பரிபாலன சபை, நீராவியடி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடாத்தி வரும் அகில இலங்கைச் சைவ மாநாட்டின் இறுதி நாளான இன்றைய கலை நிகழ்வுகள் 9.30 மணிக்கு க.சிவராமலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் "திரு நெறிய தமிழ்" என்ற தலைப்பில் சைவப் புலவர் ஏரம்பமூர்த்தி அனுசாந்தனும், "திருமுறைகாட்டும் வாழ்வு" என்ற தலைப்பில் பண்டிதர் வ.பேரின்பநாயகமும் விரிவுரை ஆற்றவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் பி.ப.2.30 மணிக்கு சைவபரிபாலன சபைத் தலைவர் சைவப் புலவர் வ.கந்தசாமி தலைமையில் ஆரம்பமாகவுள்ளன.

இதில் "சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" என்ற தலைப்பில் ச.விநாயகமூர்த்தியும் "சைவ சமய வாழ்வு" என்ற தலைப்பில் சைவப் புலவர் செ.நாவுக்கரசு விரிவுரை ஆற்றவுள்ளார்கள். (உ-2)

# செய்தித் துளிகள்

## திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தொழில் திணைக்களத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த திங்களன்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் எஸ். முத்துக் குமாரசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், முதன்மைவிருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நா.வேத நாயகம் இதனை நாடா வெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில், தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலக பிரதித் தொழில் ஆணையாளர் சதானந்தம், முல்லை மாவட்ட சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் திருமதி லீ.ஆனந்த நடராசா ஆகியோர் உட்பட அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (உ-35)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வுகளை அமுல் நடத்துதல் தொடர்பான அமைச்சரவை முடிவு பற்றிய 2004 /1 சுற்று நிருபத்தின் குறைபாடுகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் (தாய்ச் சங்கம்) தோழர் பேர்ட்டி இரண வீரகே கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் பதவியுயர்வுக்கு 2003.12.31 வரை என விதிக்கப்பட்ட காலவரையை நீக்குமாறும் வகுப்பு 1 ற்கு பதவி உயர்வுபெறவுள்ள தடைகளை நீக்கி 20 புள்ளிகள் பெற்ற சகலரையும் வகுப்பு 1ற்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சரவைக்கு இம் மாதம் 20 ஆம் திகதி வரை தாம் வழங்கியுள்ள கால அவகாசத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது. (உ)

## விசேட சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல் லூரி மாணவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியததினருக்குமிடையான விசேட சந்திப்பொன்று கடந்த வியாழக் கிழமை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தற்பொழுது நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலைக்குச் சமாந்தரமாக மாணவர் சமூகம் செயற்படவேண்டியதன் அவசியம்குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதில் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ப. பகீரதன், ஒன்றியச் செயலாளர் எஸ்.செந்தூரன் ஆகியோரும் தொழிலநுட்பக் கல்லூரி மாணவர் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (உ-19)

## தாச்சி வீரர்களுக்கு அ.அட்டை

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்களின் வீரர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகள் வழங்கப படவுள்ளன.

விரைவில் இடம்பெறவுள்ள தாச்சிச் சுற்றுப்போட்டிகளிலும், சிநேக பூர்வமான விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றுவதற்கு வசதியாகவே இவ் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## வெளிவாரிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் கலைமாணிப் பகுதி II (2001), சிறப்புக் கலைமாணி பகுதி II (2001) பரீட்சைகள் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இடமபெறவுள்ளன.

இம்முறை இப்பரீட்சைகள் வவுனியா வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் நடைபெற மாட்டாது எனவும், நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரத்தில் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

## பதிவேட்டைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

கலைமுதல் தேர்வு கல்வியாண்டு 2001/2002, வணிகமுதற் தேர்வு கல்வியாண்டு 2001 /2002, கலைமாணி பகுதி I கல்வியாணடு 2001/2002, நுண்கலைமாணி (சங்கீதம், நாட்டியம்) கல்வியாண்டு 2001/2002 ஆகியவற்றுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரித் தேர்வு நாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலுவலகத்தில் பி.ப. 2.00 மணிமுதல் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

## தகவல் தொடர்பாடல் தேசிய சான்றிதழ் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் ஒரு வருட முழுநேரப் பயிற்சி நெறிக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் வழங்கலும் இப்பயிற்சி முடிவில் இடம்பெறவுள்ளது.

ஆங்கிலத்தில் சித்தியும், கணிதத்தில் சிறமைச்சித்தியும், மொழியுட்பட இரு தடவைகளுக்கு மேற்படாது க.பொ.த. (சா/த) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன், விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதுக்குக் குறையாமல் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை (சித்தியடைந்த பாடங்களுடன்) தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 12.03.2004 அன்று நேரில் இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள காரியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## மிளகாய் செய்கையாளர் ஏமாற்றம்

தொல்புரம் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் 20 ஹெக்ரேயர் நிலத்தில் மிள. காய்ப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாகச் செய்கை பண்ணப்பட்ட மிளகாய்ச் செடிகள் நோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ளன.

இதனால், எதிர்பார்த்த இலக்குச் செய்கை மற்றும் உற்பத்தி என்பன இம்முறை அடைய முடியாமல் உள்ளதாகத் தொல்புரம் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் கவலை தெரிவித்துள்ளார். (உ-70)

## வடமராட்சி கிழக்கில் வாக்குச் சாவடி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்குப் பகுதி மககள் வாக்களிப்பதற்கு வசதியாக அந்த அந்தப் பகுதிகளில் வாககுச் சாவடிகளை அமைக்குமாறு வடமராட்சி கிழக்கிலுள்ள பொது அமைபபுக்கள கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி கோரிக்கையில், இப்பகுதியில் வாக்குச் சாவடிகளை அமைக்கும் பட்சத்தில், வடமராட்சி கிழக்குப் பகுதியில் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்ற 6 ஆயிரம் பேர் எதுவித சிரமமுமின்றி வாககளிக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-35)

## பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நியமனம்

(சுதுமலை)

வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள பகுதிகளிற்கு சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்களாக 4 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வடக்கு-கிழககு மாகாண சுகாதார சேவைப பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ் உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிற்கு நியமனம் பெற்றுள்ளனர்.

இந்நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து எவரும் தோற்றவில்லை எனபது குறிப்பிடத்தக்கது. (உ-252)

## யாழில் விரிவுரை

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் விஞ்ஞான மாணி கற்கை நெறிக்குப் பதிவு செய்தவர்களுக்கான பரீட்சை மற்றும் விரிவுரை ஆகியன இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என திறந்த பல்கலைக்கழகத்தின் தலைமைப் பீடம் அறிவித்துள்ளது. (உ-19)

## துரித அபி.திட்டத்தின் கீழ் கிராமம் தோறும் பொது மண்டபம்

(தொல்புரம்)

யாழ்.மாவட்டத்திற்கான துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், குடாநாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் ஓர் பொதுமண்டபம் அமைப்பதற்கு ஏற்றவகையில் விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இம் மண்டபமானது, அவ்வப் பகுதிகளிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், முன்பள்ளி மற்றும் புனர்வாழ்வுக் குழுக்கள் போன்றவை மேற்கொள்ளும் பல சமூகமட்ட நடவடிக்கைகளுக்கு அமையக் கூடியதாக அமைதல் வேண்டுமெனவும், இந் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையில பொதுமண்டபம் அமைக்கக் கூடியதாகப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து அவற்றின் மதிப்பீட்டினையும், மாதிரி வரைபடத்தையும் விரைவில் அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்படுகின்ற அல்லது திருத்தம் செய்யப்படுகின்ற மண்டபங்களின் சமூக அபிவிருத்திப் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் தளபாடங்கள் விநியோகிக்கும் முகமாக, அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற விபரங்களையும், அவற்றிற்கான மதிப்பீடு, மாதிரிப் படம் என்பவற்றையும் அனுப்பிவைக்குமாறும், மேற்படித் திட்டங்களைச் சமர்ப்பிக்கும்பொழுது நகரப்பகுதிகளிலும் பார்க்க பின்தங்கிய கிராமங்களுக்கே முன்னுரிமை அளித்துக் கோரிக்கைகளைச் சமர்ப் பிக்குமாறும யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர்களையும யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் கேட்டுள்ளார். (உ-60)

## 3 கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

அநுராதபுரம் மற்றும் பொலநறுவை அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றும் தாதியர்கள் நேற்று முன்தினம் காலை தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மூன்று கோரிக்கையை முன்வைத்து 300ற்கும் மேற்பட்ட தாதியர்கள் இவ்வாறு வேலைப் பகஸ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தினால் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி இருப்பதுடன், அவர்களுக்குத் தேவையான மருந்துவ வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகிஸ்கரிப்புப் போராட்டத்தை பேச்சுவார்த்தை மூலம் தீரப்பது குறித்து சுகாரார அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (உ-2)



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் மா. சின்னத்தம்பி மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் ஓய்வுபெற்ற அதிபர் செ.பத்மநாதன் மற்றும் உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பாசிரியர் பொ.அமிர்தலிங்கம் ஆகியோர் நிற்பதனையும் படத்தில் காணலாம். (படம்:- அளவெட்டி நிருபர்)



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில், கல்லூரியின் உப அதிபர் வை.சிவராசா மங்கள விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன், ஓய்வுபெற்ற அதிபர் செ.பத்மநாதன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் மற்றும் யாழ். மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் ஆகியோர் அருகில் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

(படம்:- அளவெட்டி நிருபர்)



உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலர் இ.விமலபாலச்சந்திரனால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், அருகில் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# புத்தர்-யேசு-நபிகள்-சிவன்

# இணைந்த கூட்டணி

**அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் 'தமிழ்க்குரல்' வானொலி நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகிய இவ் ஆய்வு வலம்புரி வாசகர்களுக்காக இங்கே தரப்படுகின்றது.**

தற்போதைய காலகட்டத்தில், இலங்கையில் நடைபெற உள்ள பொதுத்தேர்தல் குறித்தும், அதற்காக அரசியற் கட்சிகள் அமைத்துக் கொண்டுள்ள கூட்டணிகள் குறித்தும், தேர்தல் வியூகங்கள் குறித்தும், தேர்தல் வாக்குறுதிகள் குறித்துமே பெரும்பாலான அரசியல் நோக்கர்கள் மிகுந்த கவனத்தை செலுத்தி வருவதை நாம் அவதானிக்க கூடியதாக உள்ளது. அரசியல் களம் மிகச் சிக்கல் அடைந்துள்ள இந்த வேளையில், பொதுத் தேர்தல் குறித்தும், அதன் முடிவுகள் குறித்தும் அரசியல் ஆர்வலர்கள் அக்கறை காட்டுவது இயல்பான ஒன்றுதான்! அதிகாரத்தை கைப்பற்றுவதிலும், தமது அரசியல் எதிர்காலத்தை வளப்படுத்துவதிலும், சிங்களத் தலைமைகள் தமது முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருக்கையில், தமிழ் தேசிய இனம் தனது அபிலாசைகளைக் கொள்கை ரீதியாக வெளிப்படுத்தி, அதனை சர்வதேச சமூகத்திற்கு நிலை நிறுத்தி நிருபிப்பதற்கு, இப்பொதுத் தேர்தலை பயன்படுத்தத் தயாராகின்றது. அதாவது, சிங்களத் தலைமைகள் இப்பொதுத் தேர்தலை உள்நாட்டு அதிகாரத்தை நோக்கிய ஒன்றாக கருதுகையில், தமிழினமோ அப்பரிமாணத்தை கடந்து, இப் பொதுத் தேர்தலை ஒரு சர்வதேச அங்கீரத்திற்கான ஒன்றாகக் கருதுவதை நாம் இங்கு அவதானிக்கிறோம்.

தமிழ் தேசியம் தனது இலட்சியத்தை, கொள்கையை, வேட்கையை, ஒரு தலைமைத்துவத்தின் கீழ், பறை சாற்றக் காத்துக் கொண்டிருக்கையில், சிங்கள தேசம் தனக்குள் அரசியல் ரீதியாக பிளவு பட்டுக்கொண்டு போவது, இப்போது வெளிப்படையாகவே புலனாகின்றது. ஆனால் சிங்கள தேசம் இதைவிடப் பேராபத்து ஒன்றிற்கு தனது தலையை நுழைக்க ஆரம்பித்திருப்பது, இப்போது வெளிப்படையாகத் தெரிய ஆரம்பிக்கவில்லை என்றே நாம் கருதுகிறோம். இப்போது நீறு பூத்த நெருப்பாக மட்டும் தோற்றமளிக்கின்ற சிங்கள பௌத்த பேரினவாதம் தனது கடுமையை தமிழ் தேசியத்தை நோக்கி வீசிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதன் இன்னொரு பக்கம், சிங்களத் தேசியத்தையே பிளவுபடுத்தி எரிக்கவும் ஆரம்பித்துள்ள யதார்த்தத்தையும் இன்று நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## மத ரீதியான அடையாளம்

ஒட்டு மொத்த தமிழினத்தை தனது 'சிங்கள - பௌத்த பேரினவாத' சிந்தனையால் நசுக்க முனைந்த இத் துர்ச்சக்திகள், இப்போது, 'பௌத்த பேரினவாத' சிந்தனை மூலம், இன்று தனது சொந்த இனத்தின் ஒருபுறத்தையும் நசுக்க ஆரம்பித்துள்ளன. பல சிங்கள - கிறிஸ்தவ தேவாலயங்களை, சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் எரித்தது மட்டுமன்றி, கிறிஸ்தவ விரோத சிந்தனைகளையும். செயல்பாடுகளையும், கருத்துருவாக்கங்களையும் இத் துர்ச்சக்திகள் உருவாக்கி வருகின்றன. இன்று இந்தியாவின் பல மாநிலங்களில் வாழுகின்ற பல்லின மதங்களைச் சார்ந்தவர்களை 'இந்தியன்' என்ற பெயரால் காணப்படுவதை துறந்து, 'இந்து' என்ற பெயரால் அடையாளம் காணமுற்படுகின்ற 'இந்துத்துவ' சிந்தனை போன்று, இன்று சிங்கள தேசம், தன் இனத்து மக்களை, சிங்களவன் என்று அடையாளம் காண முனையாமல் 'பௌத்தன்' - என்ற மத ரீதியான பார்வையூடாக அடையாளம் காண முனைவதை நாம் காண்கிறோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைத்த 'இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்ட வரைபில்' உள்ள ஐந்தாவது சரத்தை இவ்வேளையில் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அந்த ஐந்தாவது சரத்தின் தலைப்பே மதச் சார்பின்மை என்பதாகும். அந்த மதச்சார்பின்மை என்ற தலைப்பினகீழ், வடக்கு கிழக்கில் எந்த ஒரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படமாட்டாது - என்று அழுத்தம் திருத்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல ஆறாவது சரத்து பாகுபாட்டிற்கு எதிரான தடை - என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில், மதம் இனம் - சாதி - தேசியம் அல்லது பிராந்தியம் - வயது அல்லது ஆண் பெண் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருப்பதை, இடைககாலத் தன்னாட்சி அதிகார சபை உறுதி செய்யும் - என்று ஆறாவது சரத்து தெளிவு படுத்துகிறது.

## தனித்துவம்

உலகின் மற்றைய விடுதலைப் போராட்டங்களோடு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நோக்கும்போது, ஒப்பீட்டளவில் தமிழீழ விடுதலைப் போராட்டம் தனித்துவமானது மட்டுமல்லாது, வியப்புக்குரியதுமாகும். இங்கு நாம் தமிழ்ழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தையோ, இராணுவ வெற்றிகளையேயோ, அர்பணிப்பு மிக்க தியாகங்களையோ சுட்டிக் காட்டவில்லை. மாறாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்கொண்ட சத்தமில்லாத இன்னொரு வெற்றியைத்தான் குறிப்பிடுகின்றோம்.

ஒரு பேரினவாத அரசின் போரையும், அதற்குத் துணை நின்ற வெளிநாட்டுச் சக்திகளையும் ஒருங்கே முகம் கொடுத்துப் போராடிய அதே வேளையில், தன் இனத்திலேயே புரையோடிப்போயிருந்த 'சாதிக் கொடுமை - வர்க்க பேதம், பெண்ணடிமைத்தனம், - மதவெறி' போன்ற சமுதாயப் புற்று நோய்களுக்கும் மருத்துவம் பார்த்து நோய் தீர்த்த அந்தப் பரந்த பார்வையைத்தான் இங்கே சுட்டிக் காட்டுகின்றோம். அதன அடிப்படையிலேதான் சிங்கள தேசத்தின் இந்த மதவாதப் புற்றுநோயை நாம் இனம் கண்டு கரிசனை கொள்கிறோம்.

இன்றைய தினம் - 'சிங்கள தேசத்தில் உள்ள புத்த மதத்தைச் சார்ந்தவர்களை, வேற்று மதத்தினர் மதமாற்றம் செய்ய முனைகின்றனர்' - என்ற குற்றச் சாட்டு பலமாகவே எழுகின்றது. 'பயமூட்டியோ அல்லது பணம் கொடுத்தோ, கட்டாய மதமாற்றம் நடைபெறுகின்றது' என்றும் ஒருசாரார் கண்டனம் தெருவிக்கின்றனர். 'சிங்கள தேசத்தில் புத்த மதத்தை சேர்ந்தவர்கள், கட்டாய மதமாற்றம் செய்யப்படுகிறார்கள்' - என்ற கூற்றினைக் குறித்து சிந்திப்பதற்காகவே, நாம் மகாவம்சத்தின் துணையை நாடினோம். இன்றைய சிங்களவர்கள் எவ்வாறு பௌத்தர்கள் ஆனார்கள், என்ற தேடலின் விளைவே இது!

பாளி மொழியிலே செய்யுள் வடிவிலே உள்ள மகாவம்சம், இலங்கைக்கு எவ்வாறு பௌத்த சமயம் வந்தது என்பதையும், இலங்கைத் தீவை ஆட்சி புரிந்த மன்னர்களின் வரலாற்றையும் விபரிக்கின்றது. மகாவம்சம் குறித்து, வித்தியாசமான கருத்துக்களை கெய்யர் (GEIGER). ஆர்.ஓ.பிராங் (R.O.FRANK), பிளீற் (FLEET), ஜோர்ச் ரேனர் (GEORGE TURNER) போன்றோர் வெளியிட்டுள்ளார்கள். இந்த மகாவம்சத்தில் 37 அத்தியாயங்கள் வரை சூளவம்சம் என்ற தொடர் நூலில் உள்ளன.

## புத்தரின் விஜயம்

மகாவம்சத்தின் முதலாவது அத்தியாயம் புத்தரின் இலங்கை விஜயங்களைப் பற்றிக் கூறுகின்றது. மகாவம்சத்தின்படி, புத்தர் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்துள்ளார். பௌத்த சமயம் எதிர்காலத்தல் பெருவளர்ச்சி கொள்ளக கூடிய தேசமாக இலங்கை இருப்பதைதன் ஞான திருஷ்டியால் அறிந்த புத்தர், இலங்கைக்கு வருகின்றார். ஆனால் இலங்கையில் ஏற்கெனவே 'இயக்கர்கள்' - என்பவர்கள் இருப்பதால் அவர்களை முதலில் அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும் புத்தருக்குப் புலப்படுகிறது.

அந்த இயக்கர்கள், குறித்த ஒரு நாளில் வந்து கூடுகின்ற மகாநாக தோட்டத்தில், புத்தர் தோன்றி, பயங்கரமான சூறைக் காற்றினை தோற்றுவித்து, இயக்கரகளைப் பயமுறுத்தினார் என்றும், இயக்கர்களைச் சூழ்ந்து தீ பரவி எழுந்தது என்றும் மகாவம்சம் கூறுகின்றது. 'இத்தீவு முழுவதையுமே உங்களுக்குத் தருகின்றோம், எங்களைக் காப்பாற்றுங்ககள்' என்று இயக்கர்கள் கேட்டுக்கொண்டதை அடுத்து அவர்களை மலைப் பிரதேசத்திற்கு புத்தர் அனுப்பி வைத்தார் என்றும் மகாவம்சம், புத்தரின் முதலாவது விஜயம் பற்றிக் கூறுகின்றது.

இரண்டாவது தடவையாக, புத்தர் நாகதீபத்திற்கு வந்து, தமது ஆற்றலால் முதலில் இருள் சூழ வைத்து, பின்னர் அதனை விலக்கி ஒளிபரவச் செய்து நாக மன்னர்[illegible]ளையும் அவரது சேனைகளை[illegible] பயங்கொள்ள வைத்தார் என்றும், அங்கிருந்த எட்டுக் கோடி நாகர்களுக்கு புத்தம்-தர்மம்-சங்கம் என்ற போதனைகளை தந்தார் என்றும் மகாவம்சம் கூறுகின்றது.

இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், கல்யாணி நாக மன்னன் மணியக்கியனின் வேண்டுதலை ஏற்க ஐந்நூறு புத்த பிக்குகளோடு புத்தர் கல்யாணிக்கு வருகின்றார். கல்யாணி என்று குறிப்பிடப்படுவது இலங்கையின் தென்மேற்குப் பகுதியான களனியா ஆகும். இவ்வாறு நாகர்-இயக்கர் ஆகியோர் வாழ்ந்த இலங்கையை, தனது மூன்று விஜயங்கள் மூலமும், புத்த சமய நாடாக மாற்றினார் என்றுதான் மகாவம்சம் கூறுகின்றது. அதாவது பயப்படுத்தியும் பிரசாரம் மூலமும், இலங்கை மக்களை, அதன் ஆதிக்குடிகளை- புத்தர் மதம் மாற்றினார் என்பது மகாவம்சத்தின் கூற்றாகும்.

மகாவம்சத்தின் இந்த ஆவணப்படுத்தலில் ஓர் அடிப்படை உண்மை ஒளிந்திருக்கின்றது. இலங்கையின் ஆதிக்குடிகள் இயக்கர்கள்-நாகர்கள் என்பவர் ஆவார் என்பதும், அவர்கள் வேறு பண்பாடு உடைய வாழ்வியலை கொண்டவரகள் என்பதும் புலனாகின்றது.

## மகாவம்சம் தரும் விளக்கம்

மகாவம்சத்தின் ஆறாவது அத்தியாயத்தில்தான் விஜயனின் கதை ஆரம்பமாகின்றது. இலங்கையை விஜயன் அடையும் போது புத்தர் பரிநிர்வாண நிலையை அடைந்து கொண்டிருந்தார் என்று மகாவம்சத்தின் ஏழாவது அத்தியாயத்தின் ஆரம்ப வசனம் சொல்கின்றது.

அதாவது இன்று மதமாற்றத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கின்ற சிங்கள பௌத்த அடிப்படை வாதிகளின் மூல நூலான 'மகாவம்சத்தின்' கூற்றின்படி, இன்றைய பௌத்தர்களும் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள்தான்! இதைப் போலவே, இன்றைய சிங்களத் தலைமைகளின் பெற்றோர்களும், பூட்டன்களும், கிறிஸ்தவ சமயத்திலிருந்து அரசியலுக்காக, புத்த சமயத்தை தழுவியவர்கள் தாம்!

மகாவம்சத்தின் 'நம்பகத்தன்மை' குறித்து, நேயர்களுக்கு புதிதாக ஏதும் சொல்லத் தேவையில்லை. ஆயினும், புத்தர் குறித்த சில வரலாற்று ஆய்வுகளை சுருக்கமாக இவ்வேளையில் கூறுவது பொருத்தமானதாகும். ஏனென்றால் புத்தர் என்பவர், இன்றைய சிங்களப் பிக்குகளினால் சித்திரிக்கப்படுவதுபோல் இருக்கவில்லை. உலக வரலாற்றில் சம உரிமைக்காகப போர் தொடுத்த சரித்திர நாயகர்களில் புத்தர் முதன்மையானவர் ஆவார். உண்மையைச் சொல்லப் போனால் திராவிடர்களை அடித்து விரட்டியதற்காக, ஆரியர்களுக்கு எதிராக குரல் கொடுத்தவர்களில் புத்தர் முக்கியமானவர் ஆவார்.

புத்தர் மீது ஆரியர்கள் மிகுந்த கோபத்தையும், வெறுப்பையும் கொண்டிருந்தார்கள் என்பதனை, வேத நூல்களிலிருந்தும் நாம் அறியக்கூடியதாக உள்ளது. மனு தர்மம் - அத்தியாயம் 4 - சூத்திரம் 30, புத்தரை பாவி என்றும், அவருக்கு உணவு அளிக்கக் கூடாது என்றும், பேசவும் கூடாது என்றும் கூறுகின்றது. இராமாயணத்தை எழுதிய வான்மீகியோ புத்தனை ஒரு திருடன் என்றும், நாஸ்திகன் என்றும் திட்டித் தீர்க்கின்றார். ஆதாரம் வான்மீகி இராமாயணம் ஸர்க்கம் 1502.

## புத்தர் போதித்தது எதை?

ஆரியர்கள் புத்தரின் போதனைகளை வெறுக்கும் அளவிற்கு, புத்தர் எதனைப் போதித்தார்? - எதனை அவர் வலியுறுத்தினார்?

புத்தரின் கோட்பாடுகள் வர்ண தர்மத்தை - சாதிப்பாகுபாட்டை முற்றாக நிராகரித்தன. அவை சமூக உறவுகளில் பரிவையும், ஒழுக்கத்தையும், பகிர்ந்து கொள்ளுதலையும் வலியுறுத்தின. முக்கியமாக இங்கே ஒரு விடத்தை நாம் சொல்லியாக வேண்டும். புத்தரின் போதனைகள் மதத்தையும் - அரசையும் ஒட்ட விடாமல் பிரித்தன. ஆனால், இன்று ஸ்ரீலங்காவில் நடப்பது என்ன? புத்த மதமே அரசு; அரசே புத்த மதம்!

புத்தர் மிகத் தெளிவான மதக் கொள்கையை வைத்திருந்தார். 'அந்தந்த வட்டாரங்களில் உள்ள மொழிதான் போற்றிப் பயன் படுத்தப்படவேண்டும்' -என்ற நிலைப்பாட்டைப் புத்தர் கொண்டிருந்தார். சமஸ்கிருத ஆதிக்கத்தை எதிர்ப்பது முக்கியமெனக் கருதினார். புத்தரது போதனைகள் முழுவதும் மகத நாட்டின் அர்த்த மாகதி என்னும் மக்கள் மொழியிலேயே அமைத்திருந்தன.

புத்தர் அடிப்படையில் ஒரு புரட்சிக்காரனாகவும், சிந்தனாவாதியாகவும், போதனை செய்பவராகவும் இருந்துள்ளார். அவரைப் போலவே இயேசு கிறிஸ்துவும் ஒரு புரட்சிக்காரனாக, சிந்தனாவாதியாக, வழிகாட்டியாக இருந்துள்ளார். நபிகளாரிடமும் இதே இயல்பையும் கருத்தாக்கங்களையும் காணக் கூடியதாக உள்ளது.

இவர்கள் யாவரும் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடியவர்களே! புத்தரின் நிலையாமைக் கொள்கையைத்தான் சைவ சமயமும் வலியுறுத்தி நிற்கின்றது. சிவன் நெருப்பு உருவமானவன். பாதியை உமையவளாகத் தருபவன். தக்கனின் வேள்வியை அழித்தவன். இந்திரனின் தோளை முறித்தவன். சந்திரனின் முகத்தை காயப்படுத்தி சூரியனின் பல்லை உடைத்தவன். யாகத்தின் அதி தேவதையாம் எச்சனை அழித்தவன். இச் செயல்களுக்குரிய அடிப்படை காரணங்களை நேயர்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். பின்னாளில் இவை திரிபு படுத்தப்பட்டது, வேறு ஓர் ஆய்வுக்கு உரியதாகும்.

## கடந்த காலத்தில் பயணிப்போம்

இருபத்தியோராம் நூற்றாண்டின், திரிபடைந்த இழிவு நிலையைச் சுட்டிக் காட்டுவதற்காக, நாம் கடந்த காலத்திற்குள் சற்றுப் பயணிக்க வேண்டியதாயிற்று. நாம இவ்வளவு சிரமப்பட்டு எடுத்துக் கொண்டதற்கு காரணம், தமிழீழத் தலைமை செய்து காட்டியுள்ள முக்கியமான முன்னுதாரணம் ஒன்றை, ஒப்பீட்டளவில் சுட்டிக் காட்டுவதற் காகத்தான்!

மதங்களின் நாயகர்கள் அன்று போதித்த அற்புதமான தற்போதனைகளை மறந்து, மதப் பேரினவாதத்திற்குள் நுழைந்து, சிங்கள தேசமும், ஏன் இந்தியாவும் கூட மத வேற்றுமையால் பிளவு கண்டு போயுள்ளன. அங்கே புத்தர் ஒரு புறமும், யேசு ஒருபுறமும், நபிகள் ஒரு புறமும். சிவன் ஒரு புறமுமாக தனிக்கட்சிகளாக மோதிக் கொள்வதைப் பார்க்கின்றோம். ஆனால், 'எந்த ஒரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்படமாட்டாது' - என்ற மதச் சார்பின்மையையும்; 'மதம்-இனம்-சாதி-தேசியம்-ஆண்-பெண்- என்ற அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாது' என்ற பாகுபாட்டை கொண்ட தமிழீழத்திலேதான், நாம் இந்த மதங்களின் நாயக்கர்களின் அற்புதமான தற்போதனைகளைக் காணக் கூடியதாக உள்ளது. மதப் பேரினவாதத்திற்குள் சிக்காத தமிழீழத்தில் தான் மத ஒற்றுமையும், மாண்பும் மிளிர்கின்றன. இன்றைய தேர்தல் மொழியில் சொன்னால், 'புத்தரும், யேசுவும், நபிகளும், சிவனும்' - தமிழீழத்தில் ஒரு கூட்டணியில், ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்கள்.

# ஆஸி.அணியின் பலத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது

## ஜஸ்ரின் லாங்கர் தெரிவிப்பு

இலங்கை அணிக்கெதிராக நடைபெறவுளள டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடவுள்ள அவுஸ்திரேலிய அணியானது மிகப் பலம் வாய்ந்த நிலையில் இருப்பதாக அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜஸ்ரின் லாங்கர் கருத்து வெளியிட்டுள்ளார். தான் இலங்கை அணிக்கு எதிராக விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்ததாகவும், இலங்கை அணி எதிரணிக்கு மிகச் சவால்மிக்க அணியாக விளங்குவதாகவும் லாங்கர் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இமமுறை நடைபெறவுள்ள இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் போட்டித் தொடர் சவால் மிக்கதாகவே அமையும் என்றும், எனினும் அவுஸ்திரேலிய அணியானது அதனை எதிர்கொள்ளத்தக்க விதத்தில் பலம்வாய்ந்த நிலையில் இருபபதாகவும் நம்பிக்கை வெளியிட்டுள்ள ஜஸ்ரின் லாங்கா, இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அணிகளில் பலம்மிக்க அணியாகவே அவுஸ்திரேலிய அணி விளங்குகின்றது. எவ்வாறாயினும இலங்கையில் விளையாடுவதறகு நாம் தயாராக இருப்பதாக லாங்கர் தெரிவித்திருக்கிறார்.

சுழல்பந்து வீச்சாளர்களைப் பொறுததவரையில் இலங்கை அணி பலம்மிக்க அணியாகவே விளங்குகின்றது. இதில் குறிப்பிடத்தக்கவர் முரளிதரன். இவரின் பந்து வீச்சிற்கு அவுஸ்திரேலிய் அணியினர் கூடுதலான கவனமெடுத்து விளையாடுவதன் மூலம் டெஸ்ட் தொடரிலும் பிரகாசிக்க முடியும்.

இது தவிர, இலங்கையில் உள்ள ஆடுகளங்கள் மிக வேகமானவை என்பதால் வேகப்பந்து வீச்சாளாகளுக்கு பெரிதும் சாதகமாக அமையப் போவதில்லை. எனவே, எமது அணியின் சுழப்பந்து வீச்சாளர்களும் சிறப்பாகப் பந்துவீசி வருவதால் இலங்கை அணியை நிச்சயமாக வென்று தொடரைக் கைப்பற்ற முடியும் என ஜஸ்ரின் லாங்கர் தெரிவித்திருந்தார்.

இதுவரை 71டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஜஸ்ரின் லாங்கர் 17சதங்கள் மற்றும் 20 அரைச்சதங்கள் அடங்கலாக 5337 ஓட்டங்களைக் குவித்திருக்கின்றார். 44.97என்ற டெஸ்ட் ஓட்ட சராசரியாகக் கொண்டுள்ள லாங்கர் கடைசியாக 1999ஆம் ஆண்டில் இலங்கைக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணததின் போது 3டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 51ஓட்டங்களை மட்டுமே மொத்தமாகப் பெற்றுக்கொண்டிருந்தார். இதனால் அணியில் இருந்து இவர் நீக்கப்பட்டிருநதாலும மீண்டும் வாய்ப்பளிக்பட்ட போது மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியில் ஆரம்பத் துடுப்பாட்டத்திற்கென தனக்கு ஓர் நிலையான இடத்தினை தேடிக்கொண்டுள்ளார். குறிப்பாக அண்மையில் நான்கு முறை தனது சிறப்பான ஆரம்பத் துடுப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணிக்காக 200 ஓட்டங்களை இணைப்பாட்டத்தின் மூலம் லாங்கர் பெற்றுக்கொடுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(யே-68,121)

## நாளைய டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் வீரர்களின் விபரம்

அவுஸ்திரேலியாவுடன் நாளை காலியின் நடைபெறவுள்ள முதல் டெஸ்ட் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கையணி வீரர்கள் 15 பேரினதும் பெயர்கள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஷசான் திலகரடண இவ் அணிக்குத் தலைமைதாங்கவுள்ளாா.

அவுஸ்திரேலியாவுடனான பயிற்சிப் போட்டியில் திறமைகளை வெளிக்காடடிய அவிஷ குணவர்த்தன அணியில் இடம்பிடித்துள்ளார். அத்துடன், அவுஸ்திரேலிய அணியைத் திணறடிக்கும் முகமாக 4சுழற்பந்து வீச்சாளர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலிய அணியுடனான 5வது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் சமிந்தவாஸ் இல்லாத குறையை நிவிர்த்திசெய்து அணியின் வெற்றிக்கு பெரிதும் உதவிய நுவன் சொய்ஷா மற்றும் நுவான் குலசேகரவும் அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**இலங்கை அணியின் விபரம் வருமாறு:**

ஷசான் திலகரட்ண (அணித் தலைவர்), மாவன் அத்தப்பத்து, சனத் ஜெயசூரியா, மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்ககார, திவான் சமரவீர, திலகரட்ண டில்சான், அவிஷ குணவர்ததன, சமிந்தவாஸ், நுவன் சொய்ஷா, நுவான் குலசேகர, முத்தையா முரளிதரன், குமார் தர்மசேன, உபபுள் சந்தான, கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி.

அவுஸ்திரேலிய-இலங்கை அணிகளுக்கிடையில் முதல் டெஸ்ட போட்டி நாளை காலியிலும், 2வது டெஸ்ட் போடடி எதிர்வரும் 16ஆம் திகதி கண்டியிலும், 3வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-121)

## அணியின் பெருவெற்றிக்கு அரும்பாடுபட்டு உழைப்போம்

### ட்ராவிட் கூறுகிறார்

பாகிஸ்தான் அணியுடனான தொடரின் முக்கியத்துவத்தை உணர்ந்து அநத அணியுடன் சிறப்பாக விளையாடுவோம் என இந்திய அணியின் துணைக் கப்டன் ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரில் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் சாம்சங் கிண்ண அறிமுகவிழா கடந்த புதன்கிழமை டெல்லியில் நடைபெற்றது.

இவ் வைபவத்தின் போது நிருபர்களிடம் பாகிஸ்தான் தொடர் குறித்து ட்ராவிட் கூறும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடாந்து தெரிவிக்கையில், பாகிஸ்தானுடன் அந் நாட்டில் கிரிக்கெற் ஆடுவது வரவேற்கத்தக்க விடயம். முடிவடைந்த அவுஸ்திரேலியாவுடனான தொடரில் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து விளையாடியது போல இந்தத் தொடரில் விளையாடுவோம்.

அத்துடன், அவுஸ்திரேலியாவுடன் விளையாடிய அனுபவம் இந்தத் தொடரில் எங்களுக்கு கூடுதல் சாதகமாக அமையும் என நான் நினைக்கின்றேன்.

ஒருநாள் தொடர் முதலில் நடைபெறுவதற்கு குறிப்பிடும்படியான காரணம் இல்லை என்றாலும் காயமடைந்துள்ள இந்திய வீரர்கள் டெஸ்ட் போட்டிக்கேற்ப உயர் தகுதியைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கலாம். அணியில் இடம்பிடித்துள்ள பெரும்பாலான வீரர்கள் முதன் முதலாக பாகிஸ்தான் செல்வதால் இத்தொடரில் மகிழ்ச்சியுடனும் ஆர்வமுடனும் உள்ளோம்.

(உ-121)

## மரதனோட்டப் போட்டி

(தொல்புரம்)

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டு வீரர்களுக்கான மரதனோட்டப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றவிரும்பும் விளையாடடு வீரர்கள், தமது விண்ணப்பப் படிவங்களைச் சங்கானைப் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (உ-70)

## றொசான் மகாநாமவுக்கு போட்டி நடுவர் நியமனம்

இலங்கைக் கிரிக்கெற் அணியின் முன்னாள் வீரர் றொசான் மகாநாம சர்வதேச கிரிக்கெற் சபையின போட்டி நடுவராக நியமிக்கப பட்டுள்ளார்.

கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை, றொசான மகாநாமவின் பெயரை சிபாரிசு செய்ததையடுத்து அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது. றொசான மகாநாம சர்வதேச கிரிக்கெற் துறையில் 14வருடகாலம் ஈடுபட்டிருந்தார். 50 டெஸ்ட் போட்டிகளிலும், 200 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் இவர் பங்குபற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது நியமனத்துடன் இப்பொழுது சாவதேசப் போட்டிகளில் 2 இலங்கை வீரர்கள் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது. மற்றைய நடுவரான ரஞ்சன் மடுகல்ல ஏற்கனவே சர்வதேச நடுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ-121)

# விளையாட்டுச் செய்திகள்



லாகூர் கடாஃபி ஸ்டேடியத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமத் சமி உடன் நடுவர் ஜமீர்ஹைதர்.

## பாக்.வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வஸீம் அக்ரம்

இந்திய அணியுடன் வெற்றிபெறுவதற்கு ஊக்கத்துடன் விளையாடுங்கள் என பாகிஸ்தான் அணியின் முனனாள் தலைவரான வஸீம் அக்ரம் பாகிஸ்தானிய வீரர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்திய அணி பலம்மிக்க அணியாகவே பாகிஸ்தான் வருகிறது. அவுஸ்திரேலிய தொடரின் போது சொந்த மண்ணில்வைத்து அவுஸ்திரேலிய அணியை திணறடித்தவர்கள் அவர்கள். ஆகவே, அவர்களுடைய துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்பன பலமாகவே உள்ளன.

இந்நிலையில பாகிஸ்தான் வீரர்கள் பந்துவீச்சு, துடுப்பாட்டம் என்பவற்றில் தமது திறமைகளை அணிக்காக வெளிப்படுத்த வேண்டும். இப்படி செயற்படுவதன் மூலம் இந்திய அணி வீரர்களின் சவால்களுக்கு சிறப்பாக முகம்கொடுக்க முடியும.

கராய்ச்சி, கடாபி போன்ற விளையாட்டரங்குகளில் பயிற்சிகளில் ஈடுபட்டுவரும பாகிஸ்தான் வீரர்களை நேற்று முன்தினம் சநதித்த வஸீம் அக்ரம் மூன்று மணித்தியாலங்களாக அவர்களுடன் தங்கியிருந்த போதே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

பந்துவீச்சு, துடுப்பாட்டம் பற்றிய விளக்கங்களை பாகிஸ்தான் வீரர்களுக்கு வழங்கிய அவர், இத் தொடரில் முழுமையாகப் பிரகாசித்தால் வெற்றிநோக்கி நடைபோட முடியுமெனத் தெரிவித்தார்.

வேகப்பந்து வீச்சாளர்களான சொய்ப் அக்தார், முஹமது சமி ஆகியோரின பந்துவீச்சுத் திறனை உற்றுநோக்கிய அவர் புது உத்திகளையும் அவர்களுக்கு விளக்கிக் கூறினார். இவர்கள் பற்றி அக்ரம் கூறுகையில்,

இவ்விரு வேகப்பந்து வீச்சாளர்களும் தமது திறமைகள் மூலம் இந்திய அணிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கலாம் எனத் தெரிவித்தார்.

இந்தத் தொடரைப் பார்ப்பதற்காக வெளிநாட்டு ரசிகர்களும் மிகவும் ஆர்வமாக உள்ளனர். ரசிகர்களின் ஆர்வத்தை பூர்த்தி செயவதற்கு பாகிஸ்தான் வீரர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டி இந்திய அணிக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

முன்னாள் அணித்தலைவர் இமரான் கான் நான்கு நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் வீரர்களை சநதித்து அவர்களை ஊக்கமூட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-121)

## அணிகளின் வரிசைப்படுத்தலில் இலங்கைக்கு மூன்றாமிடம்

ஐ.ஸீ.ஸியின் அணிகளின் தரவரிசைப்படி இலங்கை அணி 3ஆம் இடத்தில் உளளது. அண்மையில வெளியிடப்பட்ட அணிகளின் தரவரிசையில் தொடர்ந்தும் அவுஸ்திரேலிய அணி முதலிடத்தில் உள்ளது. அவுஸ்திரேலிய அணியுடனான ஒருநாள் போட்டிகள் இரணடில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2ஆம் இடத்தில் உள்ள தென்னாபிரிக்க அணியை எடுத்துக்கொண்டால நியூசிலாந்துடனான ஒருநாள் போட்டித் தொடரில் 5:1 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்க அணி மோசமாகத் தோற்றமை குறிப்பிடத்தக்கது.

**அணிகளின் தரவரிசை**

அவுஸ்திரேலியா-135, தென்னாபிரிக்கா-113, இலங்கை-109, நியூசிலாந்து 109, பாகிஸ்தான்-107, இங்கிலாந்து-106, இந்தியா-105, மேற்கிந்தியதீவு-100, சிம்பாபவே-66 கென்யா-28,பங்களாதேஷ -.(உ-121)

## சிறு விளம்பரம்

### மணமக்கள் தேவை

எங்களிடம் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், அரச-தனியார் துறை சார்ந்த வெளிநாடுகளில பிரஜாவுரிமை பெற்ற நல்ல. பணியில் இருக்கும் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. தொடர்பு:- சிவாலயா சர்வதேச திருமண நிலையம் ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15, சடடநாதர்வீதி, (சமுர்த்தி வங்கிக்கு அருகாமை) நல்லூர், யாழ்ப்பாணம். (8428)

## சுழற்சி முறைக் கடன்

(தொல்புரம்)

பொன்னாலை நாராயணன் கடற்தொழிலாளர் சங்க அங்கத்தினருக்குத் தொழில் முயற்சிகளுக்கென சூழற்சிமுறைக் கடன் அடிப்படையில் நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென வலி-மேற்கு பிரதேச செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒரு இலட்சம் ரூபா நிதியினைக் கொண்டு, தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 10 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-70)

## எள்ளுச் செய்கை பாரிய வீழ்ச்சி

(தொல்புரம்)

தற்போது நிலவிவரும் வரட்சியினால், வலி-மேற்குப் பகுதியில் இவ்வாண்டு எள்ளுப் பயிர்ச்செய்கை பாரிய வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

மேறபடி பகுதியில் கடந்த ஆண்டு ஆயிரத்து 200 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட எள்ளு, இவ்வாண்டில் 50 ஏக்கரில் மாத்திரமே பயிரிடப்பட்டுள்ளதாக தொல்புரம் கமநல பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (உ-70)

# அன்பு நிறைந்த சமூகம் மலர இயேசுவின் பாதையில் பயணிப்போம்

மனித வாழ்வானது வெறுமனே பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாது ஒரு இலட்சியத்தை நோக்கிய பயணமாக அமையவேண்டும். உண்டு, குடித்து உல்லாசமாய் பொழுதைக்கழித்து இன்பத்திலே புரண்டு எழுவதாக அமைந்தால் அவர்களின்



வாழ்வு பரிதாபத்திற்குரிய ஒன்றாகும். "உணவை விட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை அல்லவா?" (லூக் 12:23) உயிரும் உடலும் மேன்மையானது என்பதை நற்செய்தி எடுத்துக்காட்டியுள்ளது. மண்ணுலகைச் சார்ந்தவைபற்றி எண்ணுபவர்கள் எல்லாம் உணவிலும், உடையிலும், களியாட்டத்திலுமே தமது காலத்தைச் செலவழிக்க முற்படுவார்கள். அவர்களின் பரிதாப நிலையைப் புனித பவுல் இவ்வாறு விளக்குகின்றார்."அழிவே அவர்கள் முடிவு. வயிறே அவர்கள் தெய்வம், மானக்கேடே அவர்கள் பெருமை" (பிலிப் 4:19) இப்படியான வாழ்க்கை வாழ்பவர்கள் எத்தனையோ ஆயிரம் பேர்.

### கிறிஸ்தவர்களின் வழி

கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றவர்களின் வழி நிச்சயமாக சிலுவை வழிதான். அதிலே இரண்டு பேச்சுக்கு இடமில்லை. சிலுவையின்றித் துன்பம் இல்லை, சிலுவையின்றி மீட்பு இல்லை. கிறிஸ்துவின சிலுவைக்குப் பகைவர்களாக நடப்பவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவாாகள. ஆகவே எமக்கு வானகமே நமது தாய்நாடு. அங்கிருந்து தான் மீட்பராம் இயேசு கிறிஸ்து வருவார், எனக் காத்திருக்கின்றோம். அவரேதான், தமது ஆற்றலால் தாழ்வுக்குரிய நம்முடலை மாட்சிமைக்குரிய தமது உடலின் சாயலாக உருமாற்றவும் வல்லவராக இருக்கின்றார். எனவே தான் இயேசுகிறிஸ்துவிலே முழுமையாக நம்பிக்ககை வைத்து இத்தவககாலத்திலே அவருடைய பாடுகளைச் சிலுவைப்பாதை வழியாகச் சிந்தித்து எமது தீய நாட்டங்களில் இருந்து விடுதலை பெறவேண்டும். பாவத்திலே புரண்டு கிடப்பவர்கள் அல்லாமல் இயேசுவின் வல்லமையால் எழுந்து விண்ணகப்பயணத்தைத் தொடரவேண்டும்.

### போலிச்சாட்டுப் போக்கிலிருந்து விடுபடல்

ஆலயங்கள் இருப்பது மக்களின் ஆன்மீகவாழ்வை மேன்மைப்படுத்துவதற்கு அங்கே நடைபெறும் செயற்பாடுகள் எல்லாம் விசுவாசத்தில் மென்மேலும் மக்களை உறுதிப்படுத்தி, அவர்களைப் பங்கு கொள்ளும உறுப்பினர்களாக மாறறுவதற்கே. உலகியலே பெரிதென்று எண்ணுகினறவர்கள் ஆலயங்களில் முழங்கும் பாடல்கள், சிந்தனைகள் தமது அன்றாட வாழ்வியலுக்கு தடையாக அமைகின்றன. பிள்ளைகளின் படிப்பைக் குழப்புகின்றன. நோயாளர்களுக்கு இடையூறு விளைவிக்கின்றன என்ற

## பரமபிதா காட்டியபாதை

போலி மதிப்பீடுகளைச் சொல்லி புனித பணிகளுகசு இடையூறுகள் விளைவிக்கின்றார்கள். பார்க்கக் கூடாத படக்காட்சிகளையும் கேட்க வெறுப்பூட்டும் பாடல்களையும் பார்த்தும் கேட்டும் ரசித்தவர்களுக்கு ஆண்டவனின் ஞானமும், அருள்வாக்குகளும் அருவருப்பாகத்தான் இருக்கும். அறிஞர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அறிவிலிகளே பணக்காரர்களே உங்களுக்கு ஐயோ கேடுஎன்று ஏற்கனவே ஆண்டவன் கூறிவிட்டான். இன்னுமா நீங்கள் மனம் மாறவில்லை? மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்!

### ஆண்டவரோடு உள்ள உறவு

எப்பொழுதும் விழித்திருங்கள், இடைவிடாது ஜெபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றிகூறுங்கள் என்று புனித பவுல் கூறுவது போன்று "ஆண்டவரோடு உள்ள உறவில் நிலைத்திருங்கள் (பிலிப் 4:22) ஆன்மீக வாழ்வில் நாம் தூக்கக் கலக்கமுளளவர்களாக இருந்தால், ஆண்டவனை கண்டுகொள்ளும் பேற்றை அடைந்துகொள்ளமாட்டோம். "விழிப்பாய இருந்து ஜெபிப்பதினாலே நாம் இறையுறவை அடைந்து கொள்ளலாம்" இயேசு தோற்றம் மாறியபோது சீடர்கள் தூக்கக்கலக்கத்தில் இருந்தார்கள். அவர்கள் விழித்துக் கொண்டபோதே மோசேயும் எலியாவும் இயேசுவோடு உரையாடியதை கண்டீர்கள். பேதிரு இயேசுவிடம் நாம் இங்கேயே தங்கிவிடுவோம். விண்ணக மகிமையை அவர்கள் அகக்கண்கள் திறகக கண்டு கொண்டதினால் ஆனந்தமடைந்தாகள் எனவே செபமே விண்ணக மகிமையைக் காணவும், மண்ணகத்தடைகள் உடைக்கப்படவும் வல்லையுள்ள ஆயுதமாக இருக்கினறது. விசேடமாக இந்தத் தவக்காலத்திலே எமது செபவாழ்வை மேன்மையடைச்செய்து இறையுறவிலும், சகோதர உறவிலும் புதுப்பித்தல்களை உருவாக்கி அன்புச் சமூகம் மலர அன்பராம் இயேசு காட்டிய பாதையில் பயணம் தொடர்வோம். □

**அருள்தாசன்**

# ஆலடி அருணா வெளியேறியது ஏன்?

## தி. மு. க. தலைவர் தரும் விளக்கம்

(சென்னை)

தி.மு.க.,காங்கிரஸ் சார்பில் திருச்செந்தூர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்து ஆலடி அருணா பெப்ரவரி மாதம 5 ஆம் திகதியே மனு கொடுத்திருந்தாரென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம பேசிய அவர், ஜனவரி மாதம் தி.மு.க. எடுத்த முடிவின்படி காங்கிரஸுடன் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டது. அப்போது அகில இந்திய காஙகிரஸ் தலைவராக சோனியா காந்திதான் இருந்தார். இவ்வளவு நாள் கழித்துத்தான் சோனியா காந்தி இத்தாலி நாட்டுக்காரர் என்பது ஆலடி அருணாவுக்குத் தெரிந்திருக்கிறது என்றும் கூறினார்.

திருசசெந்தூர் தொகுதி கிடைக்காததால்தான் ஆலடி அருணா கட்சியை விட்டு வெளியேறினாரா என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், அதனைப் பத்திரிகையாளர் யூகத்துக்கே விட்டுவிடுவதாகவும் கூறினார்.

பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிடுவதற்கு அவர் வேட்பு மனு தாக்கல் செய்திருக்கிறார். ஜனவரி மாதத்திலேயே காங்கிரஸ் கட்சியுடன கூட்டணி அமைக்கப்பட்டு விட்டது. வேட்பாளர்களது அறிவிப்பு மார்ச் முதலாம் திகதி. ஆனால் சோனியா காந்தி இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர் என்பது ஆலடி அருணாவுக்கு இப்பொழுதுதான் தெரிந்திருக்கிறது என்று கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

புதுவை மக்களவைத் தேர்தல் பற்றி செய்தியாளர்கள் கேட்ட கேளவிக்குப் பதிலளித்த கருணாநிதி, அந்தத் தொகுதியில் போட்டியிடும் பா.ம.க. வேட்பாளரைத் தி.மு.க. ஆதரிக்கும் என்றார். இது ஏற்கெனவே எடுத்த முடிவு என்றும், இந்த முடிவை உறுதிப்படுத்த வேண்டியது காங்கிரஸின் கடமை என்றும் தெளிவு படுத்தினார்.

துணைப் பிரதமர் அத்வானியின் ரதயாத்திரையை தி.மு.க. எதிர்க்குமா என்ற கேள்விக்குப் பதிலளித்த கருணாநிதி, ரதயாத்திரையைக் கண்டித்து அறிக்கை விடுத்திருப்பதாகவும் எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறினார்.

தமிழ்நாட்டில் தேர்தல் விதி முறைகளை மீறி நள்ளிரவில் சாலைகள் போடப்படுவது குறித்து ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்கு அதைக் கொண்டு செல்லும் என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார். (து)



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பேச்சாளரும், பிரபல வழக்கறிஞருமான கபில் சிபல் சென்னை வந்தார். தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய பிறகு மக்களவைத் தேர்தல் குறித்து கபில் சிபல் செய்தியாளர்களிடம் பேசியபோது.

## தேர்தலில் ஜனநாயக விரோத நடவடிக்கை தே.ஆணையம் கண்காணிக்க வேண்டும்

மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி நாடு தழுவிய ரதயாத்திரை மேற்கொள்வதை தேர்தல் ஆணையம் கருத்திற் கொள்ள வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கிறார்.திண்டிவனத்தையடுத்த தைலா புரததில் செய்தியாளர்களிடம்பேசிய அவர், அயோத்தி பிரச்சினையை மீண்டும் எழுப்பப் போவதில்லை என்று கூறிவநத பா.ஜ.க., தேர் தல் நேரததில அந்தப் பிரச்சினையை முன்னிலைப் படுத்துவதாகக் குற்றஞ்சாட்டினார்.

தேர்தலைச் சந்திக்க தமிழகத்தில் ஆளும் அ.இ.அ.தி.மு.க. ஆள் பலத்தையும் பண பலத்தையும் தயார்ப்படுத்தி வருவதாகக் குற்றஞ்சாட்டிய ராமதாஸ் இதுபோன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணையம் கண்காணித்து அதனைத் தடுக்க வேண்டும் என்றார்.பொதுவாகத் தேர்தல் திகதி தேர்தல் நடப்பதற்கு 45நாட்களுக்கு முன்னர்தான் அறிவிக்கப்படும் எனறு கூறிய அவர், ஆனால் இந்தமுறை 75நாட்களுக்கு முன்னதாகவே தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு விட்டது என்றார்.

இந்த நீண்ட கால அவகாசத்தில் மாநில அமைச்சர்கள் தேர்தல் நடத்தை விதிகளை மீறுவதற்கு வாய்ப்பிருப்பதாகவும் அவர் கூறினார். (து)

**இந்தியச் செய்திகள்**

## கும்பகோணத்தில் மகாமகத் திருவிழா இலட்சக்கணக்கில் மக்கள் வெள்ளம்

(சென்னை)

கும்பகோணத்தில் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கொருமுறை கொண்டாடபபடும் மகாமகத திருவிழாவையொட்டி மூன்றுநாள் சந்திர மௌலீஸ்வர பூஜையை காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் துவக்கி வைத்தார்.

மகாமகத் திருவிழா தொடங்கியதிலிருந்து மகாமகக் குளத்தில் ஏராளமான மக்கள் தினமும் புனித நீராடி வருகின்றார்கள்.

மக்கள் புனித நீராடுவதற்கு வசதியாக இந்தக் குளம் 24 மணி நேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மகாமகத்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தீர்த்தவாரியில் மகாமகக் குளத்தில் மக்கள் அணியணியாக நீராட அனுமதிக்கப்படுவார்கள்.

கும்பகோணத்தில் ஏராளமான காவல்துறையினரும் பாதுகாப்புத துறையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக கும்பகோணத்தில் 32 தற்காலிக காவல் நிலையங்களும் 9 நடமாடும் காவல் நிலையங்களும்அமைக்கப் பட்டிருப்பதாகவும் ஐ.ஜீ. ஜோர்ஜ் தெரிவித்தா.

மகாமகத் திருவிழாவின் கடைசி நாளன்று 15, 20 இலட்சம் மக்கள் கும்பகோணத்துக்கு வரக் கூடுமென்பதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக காவல் துறை கண்காணிப்பாளர் ராஜேந்திரன் தெரிவித்தார். (து)

## தேர்தல் வியூகம் குறித்து பா.ஜ.க. தலைவர்கள் கூட்டு ஆலோசனை

(புதுடில்லி)

வரும் மக்களவைத தேர்தல் மற்றும் சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்க பா.ஜ.க. மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து புதுடில்லியில் பா.ஜ.க. தலைவர்கள் ஆர். எஸ்.எஸ். இன் மூத்த தலைவர்களுடன் ஆலோசனை நடத் தினார்கள்.

பிரதமர் வாஜ்பாயின் இல்லத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பா.ஜ.க. தரப்பில் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி, கட்சித் தலைவர் வெங்கைய நாயுடு, பொதுச் செயலாளர் பஞ்ஞை ஜோஸி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆர். எஸ்.எஸ். சார்பில் அதன் தலைவர்கள் மோகன் பஹவத், சேஷாத்திரி மற்றும் மதந்தாபேபி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மக்களின் ஆதரவைத் திரட்டுவது, துணைப் பிரதமரின் ரதயாத்திரை, பா.ஜ.க. வுக்கும் சன்சலிவார் அமைப்புகளுக்கும் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது உள்ளிட்ட பல் வேறு வஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக புதுடில்லியில் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# அரபாத்தின் விருப்பத்தை நிறைவேற்ற மதத் தீவிரவாதிகள் கடும் எதிர்ப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத தனது வாழ்நாள் முடிந்த பின தன்னை அல்-அக்சா மசூதி வளாகத்தில் அடக்கம் செய்ய வேண்டுமென விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஆனால் அதை மதத் தீவிரவாதிகள் கடுமையாக எதிர்த்து வருகிறார்கள்.

சாவதேச அரங்கிலே பலஸ்தீனம் என்ற பெயரை ஆழப் பொறிக்க அயராது உழைத்த யஸீர அரபாத்தை மத நம்பிக்கையற்றவராகவே தீவிர மதவாதிகள் பார்க்கின்றனர். எனவே, மதக் கோட்பாடுகளில் ஆழ்ந்த நம்பிக்கையோ ஈடுபாடோ இல்லாத அரபாத்தின் உடலை அந்த இடத்தில அடக்க ம் செய்வது அந்த இடத்தின் புனிதத்தையே கெடுத்துவிடும் எனறு கண்டித்துள்ளனர். எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்களையும் ஜெருசலேம் நகரில் விநியோகித்துள்ளனர்.

அரபாத்துக்கு வயதாகி விடடதேயொழிய அவர் நல்ல உடல் நலத்துடனேயே இருக்கிறார். இருப்பினும் தனது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்த அவர் இப்படியொரு ஆசையைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது கடைசி ஆசைக்கு மதிப்புக் கொடுக்காமல் கடும் போக்கு மதவாதிகள் அதனை எதிர்த்து வருகிறார்கள். அரபு மற்றும் பல்ஸதீன இனத்தவரும் தனது உடல் அந்த மசூதியில் அடக்கம் செய்யபபட வேண்டும் என்ற அரபாத்தின் வருப்பத்தை விரும்பாதவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

அந்த மசூதிக்கு அரசியல் தலைவர்கள உள் பூர்வமாகத் தொழுகை நடத்த வந்தால்கூட விரட்டியடிக்கிறனர்.

இந்த ஆண்டின் துவக்கத்தில் எகிபது நாட்டின் வெளியுறவு அமைசசர் அகமது மஹர் அங்கு தொழுகை நடதத வந்தபோது முஸ்லிம் விடுதலைக் கட்சித் தொண்டர்கள் அவர் மீது காலணிகளை வீசினர்.

அவரும் எகிப்து அதிபர் ஹோஷ்னி முபராக்கும் அரபுகள், முஸ்லிம்கள் ஆகியோரின் நலன்களை விடடுக் கொடுத்து இஸ்ரேலியர்களுடன் நட்புப் பாராட்டுவதாக அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். (து)



டுபாயில் உள்ள புர்ஜ் அல் அராப் ஹோட்டலின் மேல்தளத்தில அமைக்கப்பட்டுள்ள ஹெலிகொப்டர் இறங்குதளத்திலிருந்து (செவ்வாய்க்கிழமை) கோல்ஃப் பந்தை அடிக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த புகழ்பெற்ற கோல்ஃப் வீரர் டைகர் வுட்ஸ். டுபா கோல்ஃப்



ஒருவர் மீது ஒருவர் வண்ணப்பொடிகளை தூவி மகிழ்ச்சியை வெளிப்படுததும் ஹோலிப் பண்டிகை நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. ஹோலிப் பண்டிகைக்கு ஒரிரு தினங்களுக்கு முன்பே வண்ணப்பொடிகளின் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. பஞசாபில் வண்ணப்பொடிகளுடன் ஹோலியைக் கொண்டாடும் பெண்கள்.

# ஈராக் மீது பாரிய தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிடுவதாகத் தகவல்

(பக்தாத்)

ஈராக் மீது பாரிய தாக்குதலொன்றை மேற்கொள்ளப் பயங்கரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைத்தளபதி ஜோன் அபிஸயித் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளின் திட்டம் தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு முக்கிய அதிகாரிகளுககு இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கர்பலாவில் ஷியா முஸ்லிமகளின் மத வைபத்தின் போது இடம் பெற்ற தொடர் தற்கொலைத் தாக்குதல்களையடுத்து 143 சந்தேக நபர்களை அமெரிக்கப்படை கைது செய்திருக்கிறது.

கர்பலா மற்றும் தலைநகர் முதலான இடங்களில் கூடியிருந்த இலட்சக்கணக்கான ஷியா முஸ்லிம்கள் மீது இனம்தெரியாதோர் நடத்திய 9 தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 180 க்கும் அதிகமானோர் உயிரிழநததோடு 500க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பி.பி.எஸ். செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியொன்றில் அமெரிக்க கூட்டுப்படைத் தளபதி ஜோன அபிஸயித் இத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் மிக மோசமான நிலையில் வன்முறைகள் தலைதூக்கும் அபாயம் இருப்பதாகத் தெரிவித்த அவர், அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள ஈராக்கின் நிர்வாக அதிகாரங்கள் விரைவில் ஈராக்கியர்களிடம் கையளிக்கப்படுமென்றார்.

கர்பலா மீது பயங்கரவாதத் தாக்குதல்கள நடத்தத் திட்டமிட்டிருப்பதை அறிந்து கொண்டே அதறகு முன்னேற்பாடான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிவித்த ஜோன் அபிஸயித் குறிப்பிட்ட தாக்குதல்களை விட பல கார்க் குணடுத் தாக்குதல்களும் இடம்பெறுமெனததான் நம்பியதாகவும் தெரிவித்தார்.

அதனால் பஸ்ராவிலும் பக்தாத்திலும் பாதுகாப்பைப் பலப்படுத்தியதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை அல்-கெய்டாவின் முக்கியஸ்தராகக்கருதப்படும் முஸாப் அல்-ஸர்கவி என்பவரே இத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டவர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதனால் ஸர்கவி தொடர்பான தகவல்களைத் தருவோருக்கு மில்லியன் கணக்கான டொலர்களை சன்மானமாக வழங்குவதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் இககுற்றச்சாட்டுகளை அல்-கெயடா மறுத்துள்ளது. (து)

# நோபல் பரிசுக்கு 144 பெயர்கள் பரிந்துரை

(ஒஸ்லோ)

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசைப் பெறத் தகுதியுள்ளவர்கள எனற பரிந்துரைப் பட்டியலில் போப பாண்டவர் இரண்டாவது ஜான்பால், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், பிரான்ஸ் அதிபர் ஜாகுஸ் சிராக், செக் நாட்டின் முன்னாள் அதிபர் வக்லேவ் ஹேலல, ஐ.நா. வின் முனனாள ஆயுத சோதனையாளர் ஹான்ஸ பிளிக்ஸ், சர்வதேச அணுவிசை ஏஜன்ஸித் தலைவர் முகம்மது எல்பராதே உட்பட 144 தனி நபர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இரட்சணிய சேனை, ஐரோப்பிய யூனியன், சர்வதேச ஐக்கிய இயக்கம் உட்பட 50 அமைப்புகளின் பெயர்களும் நோபல் பரிசுக்காகப் பரிந்துரைககப்பட்டுள்ளது.

நோபல் பரிசு பெறுவோருக்கு 6 கோடி ரூபா ரொக்கப் பரிசு வழங்கப்படும். இந்த ஆண்டு ஒக்ரோபா மாத மத்தியில் பரிசு பெறுபவர்களின் பெயர்கள் அறிவிக்கப்படும். (து)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் சூடு பிடிக்கிறது

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபள்யு புஷ், ஜனநாயகக்கட்சி சார்பில் நிறுத்தப்பட்டுள்ள ஜோன ஹெரி ஆகிய இருவரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம திகதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

நன்கொடையாளர்களைச் சந்திக்க அதிபர் புஷ் கலிபோர்ணியாவுக்கும் ஜனாதிபதி வேட்பாளர் ஹெரி புளோரிடா மாகாணத்துக்கும சென்றுள்ளார்கள்.

இப்பொழுது தேர்தல் நடைபெறறால் பல இடங்களில் அதிபர் புஷ் தோல்வியடைவார் என்ற நிலையே காணப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கிறார்கள்.

புஷ்ஷை ஆதரித்து புதிய விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 17 மாகாணங்களிலும் 2 மாதங்களுக்கு பிரசாரம் நடத்த புஷ் சார்ந்துள்ள குடியரசுக் கட்சியினர் திட்டமிட்டுள்ளனர்.

ஈராக் போர் பற்றியும் புஷ்ஷின் பொருளாதாரக் கொள்கைகளை விமர்சித்தும் ஜனநாயகக் கட்சியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுளளனர்.

அவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில உறுதியான தலைவராகவும், அமெரிக்கர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் தலைவராகவும் புஷ்ஷை முன் நிறுத்திக் குடியரசுக் கட்சியினர் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி தீவிரவாதிகளால் அழிக்கப்பட்ட உலக வர்த்தக மையக் கட்டடம், புஷ் மற்றும் அவரது மனைவி லாரா புஷ்ஷின படங்கள் அந்த விளம் பரங்களில் இடம்பெற்றுள்ளன. (து)

# பாக். பழங்குடியினர் பகுதியில் குண்டு வெடிப்பு

(வானா)

பாகிஸ்தானில். பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்றின் அருகே ரிமோட் கொன்றோல் மூலம் குண்டு ஒன்று வெடிக்கச் செய்யப்பட்டதன் மூலம இராணுவ வீரர் ஒருவர் காயமடைநதார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாதிகளைத் தேடுவதற்காக ஆப்கானிஸ்தான் எல்லையில் தெற்கு வஸிரிஸ்தான் பழங்குடியினர் பகுதியிலுள்ள முக்கிய நகரான வானாவில் முகாமிட்டுள்ள பாகிஸ்தான் இராணுவ வாகனம் அருகிலேயே இக் குண்டு வெடித்தது. இதில் துணை இராணுவப் படைவீரரொருவர் காயமடைந்தார்.

இச்சம்பவத்துக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை.

குண்டு வெடிப்பில் பறந்து வந்த இரும்புத்துண்டு தாக்கியதில் மேலுமொருவர் காயமடைந்தார்.

வானா நகரில் கடந்த வாரம் இராணுவ ஹெலிகொப்டர் உதவியுடன் மூன்று வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது. இராணுவத்தினர் சந்தேகத்துக்கிடமான 25 பேரைக் கைது செய்தனர். ஆனால் அவர்களில் ஒருவர் கூட அல்-கெய்டா அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்லர் எனத தெரிகிறது. (து)



பிரதமர் வாஜ்பாய் எழுதிய முக்கிய கவிதைகளின் தொகுப்பு தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அந்த புத்தகங்களை பிரதமர் வாஜ்பாய் வெளியிட்டார். விழாவில் பேசிய அவர், அரசியல் குறுக்கிடாவிட்டால் நான் கவிஞனாகி இருப்பேன் என்றார்.

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். -குறள்

வலம்புரி

## தமிழர்களின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும்

விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், மட்டு. அம்பாறை மாவட்ட விசேட தளபதியாக இருந்த கேணல் கருணாவுக்குமிடையிலான கருத்தியல் வாத முரண்நிலை, தமிழ் மக்களின் மனங்களை ரணமாக்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு தமிழ் மக்களின் உரிமைக்கு உத்தரவாதமான அமைப்பு என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்படக்கூடிய சிறு விலகல் நிலைகளும் ஒட்டு மொத்தமான தமிழினத்திற்கே பாதகமாக அமையும் என்பதை யாருமே மறுக்க முடியாது.

இன்று உலக நாடுகள் முழுவதும் விடுதலைப் புலிகளின் படைப்பலம் - ஆட்பலம் - அறிவுப் பலம் - ஆயுத வியூகம் என்பனவற்றைக் கண்டு வியந்து போயுள்ளன. இதனால் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு தமக்குச் சவாலாக அமைந்துவிடுமோ என்ற அச்சம் சர்வ வல்லமை பொருந்திய நாடுகளுக்கே ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கையின் இனவிவகாரங்களில் தாமும் தலையிட்டு அதனைத் தீர்த்து வைப்பதாகக் கூறிக்கொண்டு சில நாடுகள் இலங்கைக்குள் புகுந்துள்ளன.

உண்மையில் இந்நாடுகளின் நுழைவு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கல்ல; மாறாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பெரும் பலத்தை சிதறடிக்கும் நோக்குடனேயே என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இதன் பிரதிபலிப்பாக தமிழீழ மண்ணில் கடந்த சில நாட்களாக நடைபெறும் கசப்பான சம்பவங்கள் அமைந்துள்ளன. வடக்குக் கிழக்கு இணைந்த தாயகம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போதெல்லாம் வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்ற கோட்பாடே முன்வைக்கப்பட்டது. இவ்வாறானதோர் நிலையில் வடக்குக் கிழக்கு என்ற பிரதேசவாதம் திடீரெனக் கருக்கட்டியுள்ளதெனில் அதற்குப் பின்னணியில் பலமான சக்திகள் உள்ளன என்பதை எளிதில் மறுத்துவிட முடியாது.

பிரதேசவாதத்தைத் தூண்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தைச் சிதறடிக்கலாம் என்ற எண்ணப்பாட்டுக்கு தமிழ் மக்கள் எவருமே இடங்கொடுக்கமாட்டார்கள்.

ஓர் விடுதலைப் போராட்ட அமைப்பில் கருத்தியல்வாதங்கள் ஏற்படுவது இயல்பு. இஃது அந்த அமைப்பிற்குள் தீர்க்கப்பட வேண்டியது. உலக வரலாற்றின் பட்டறிவு எமக்கு உணர்த்துவதும் இதுவே. இதனை விடுத்து, தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் நாடுகளின் பின்னணிக்கு இசைவடைவோமாக இருந்தால் அஃது இனத்தின் விடிவுக்கு ஏற்படுகின்ற அவலமாகவே இருக்கும்.

இலங்கை நாட்டில் தமிழ் மக்கள் மேற்கொண்டுள்ள விடுதலைப் போராட்டம் பணத்தினாலோ அன்றிப் பதவியினாலோ கட்டியெழுப்பப்பட்டதல்ல. இது மதிப்புயர்ந்த மனித உயிர்களின் ஆத்ம பலத்திலிருந்து கட்டியெழுப்பப்பட்டதென்பதை உலகு வாழ் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

விடுதலைப் புலிகள் ஈழத்தமிழர்களின் தலைமை மட்டுமல்ல, உலகத் தமிழர்களுக்கும் தலைமையாக இருக்கக் கூடியவர்கள் என்ற தமிழ்த் தலைவர்களின் புகழாரத்தை ஒவ்வொரு தமிழ் மகனும் தமது உள்ளத்தில் ஆழமாகப் பதித்துக் கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் ஏற்படக் கூடிய ஒவ்வொரு தாக்கங்களும் சிங்கள பேரினவாதத்தை மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைக்கும். அது மட்டுமன்றி, தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற உணர்நிலை சிங்கள மக்களிடம் ஏற்பட்டு வருகின்ற இந்நேரத்தில் இத்தகைய தாக்கங்கள் எதிர் விளைவான பிரதிபலிப்புக்களை ஏற்படுத்திவிடும்.

எனவே 20 வருட கால போராட்டத்தின் அறுவடையை அனுபவிக்க இருக்கின்ற வேளையில், பிரதேசவாதம் என்ற மாயைக்குள் யாரும் மயங்காமல், தமிழ் இனம் - தமிழ் மொழி - தமிழ் உடன்பிறப்புக்கள் என்ற உணர்வோடு தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

# யாழில் மீளவும் குடியமர்ந்த மக்களுக்காக 35 ஆயிரம் வீடுகள்

## அமைக்கப்படும் என அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்காக 35 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்க வேண்டியிருப்பதாக யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலப் போர் நடவடிக்கைகளால் யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியேறி பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வந்த மக்கள் தற்போதுள்ள அமைதிச் சூழ்நிலையைத் தொடர்ந்து தம் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்குத் திரும்பியுள்ளனர்.

எனினும், இவர்களது வாழ்விடங்கள் இராணுவ பாதுகாப்பு வலயங்களுள் முடக்கிவைத்திருக்கப்பட்டிருப்பதுடன், குண்டுவீச்சுக்களால் சேதமடைந்தும் உள்ளன.

இதனால் 35 ஆயிரம் குடும்பங்கள் வசிப்பிட வசதிகள் இன்றி அவல வாழ்வை அனுபவித்து வருகின்றனர். இவ்வாறு அவலப்படுபவர்களுக்கே வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

இவற்றில் 7 ஆயிரத்து 500 வீடுகளை உதவும் தொண்டர் அமைப்புகளும் ஏனைய வீடுகளை பொதுநிர்வாக அமைச்சும் அமைத்துக் கொடுக்கவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்காக ஆயிரம் வீடுகளும் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்காக 200 வீடுகளும் இராணு அதிஉயர் பாதுகாப்பு வலயங்களால் தமது வாழ்விடங்களை இழந்தோருக்காக 5 ஆயிரம் வீடுகளும் உடனடியாக நிறுவிக் கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4,2)

## 4 இலட்சம் செலவில் சுழற்சிமுறைக் கடன்

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்குச் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில், சுழற்சி முறைக் கடன்கள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளன.

இதற்கென யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ், வலி.மேற்கு பிரதேச செயலகத்தால் 4 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்கென ஒதுக்கப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியினைக் கொண்டு 15 குடும்பங்களுக்கும், வட்டு. மேற்கு கிராம அலுவலர் பிரிவிற்கென ஒதுக்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா நிதியினைக் கொண்டு 10 குடும்பங்களுக்கும் வட்டு.தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா நிதியினைக் கொண்டு 15 குடும்பங்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் முயற்சி சுழற்சி முறைக்கடன் வழங் கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-70)

## வாக்காளர் உரிமையை பேண வழிசமைக்குக!

### தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்டத்தில், இரர்ணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வசிக்கும் வாக்காளர்கள் தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி வாக்களிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு வன்னி மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் அ. விநாயகமூர்த்தி தேர்தல் ஆணையாளரைக் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில்,

வாக்களிக்கும் உரிமை அடிப்படை மனித உரிமையாகும். கடந்த பொதுத் தேர்தலின்போது இப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை வாக்களிக்க அனுமதிக்கப்படாததை அடுத்து அவர் உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் அவருக்கு நட்டஈடு வழங்கத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

### திருடர் தொல்லை

(கொழும்புத்துறை)

ஆனைக்கோட்டைப்பகுதியில் திருடர்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கிறன்றனர்.

இத் திருட்டுச் சம்பவங்களால் பொதுமக்கள் பெரிதும் பீதியுடன் தமது இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர்.உ-51)

### தினசரி தியானம்

**விவேகச் சிந்தனைகள்**

கிராமம் கிராமமாகச் சென்று மனித குலத்திற்கும் பரந்த இந்த உலகத் தற்கும் நன்மைசெய். மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற் காக நீ நரகத்திற்கும் செல்லத் தயா ராக இருக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

## வெளிநாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் 63 பேர் இன்று வருகின்றனர்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான கண்காணிப்புப் பணியில் ஈடுபடவென ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 63 பேர் அடங்கிய குழுவினர் இன்று கொழும்பு வந்தடையவிருப்பதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களும் எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் இலங்கை வரவிருப்பதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. (உ)

## கிழக்கு படுகொலைகளை பிரதமரே நிறுத்தவேண்டும்

### ஐ.ம.சு.மு. கோரிக்கை

(கொழும்பு)

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் புலிகளால் செய்யப்பட்டவை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கண்டித்துள்ளது. அத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பிரதமரே இதனைத் தீர்த்துவைக்க வேண்டும் என அது கேட்டுள்ளது.

இதுபற்றிய அறிக்கையில்,

கூட்டணித் தலைவர் சுசில் பிரேம ஜயந்த கையொப்பமிட்டிருந்தார். அவர்களின் கூட்டத்தில் இவ்வறிக்கை வாசிக்கப்பட்டது. இவ்விடயம் பற்றி ஐ.தே.க. அரசாங்கம் மௌனமாக இருப்பது மர்மமாகவுள்ளது. தமது சொந்த உறுப்பினர்கள் சுடப்பட்டும் ஐ.தே.க. மௌனமாக இருப்பது எமக்கு அதிர்ச்சியளிக்கிறது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ-06)

## தவக்கால சிந்தனை-12

கிறிஸ்தவ மக்களின் விசுவாசத்தின் மட்டில் ஒரு அங்கலாய்ப்பு உண்டு. இயேசுவின் உச்சகட்ட மகிமைச் செயல் அவரது உயிர்ப்பே. இந்த உயிர்பபின் நிகழ்வை ஏன் இரகசியமாக வைத்திருக்க வேண்டும்? அனைவரும் பார்க்கும்படியாக பாறையை உடைத்து எழுந்திருந்தால் அந்தக் காட்சியைக் கண்டு உடனடியாக அனைவரும் எதிரிகள் உட்பட இயேசுவின் மேல் விசுவாசம் கொண்டிருப்பார்களே! அதுபோல தன்னை எதிர்த்த மக்கள் மத்தியில் தன்து உருமாற்ற நிகழ்ச்சியை பொதுவான இடத்தில் அனைவரும் பார்க்கும்படியாக செய்திருந்தால் அனைவரும் இயேசுவின் மேல் நமபிக்கை கொண்டிருப்பார்களே! இயேசுவின் மற்ற போதனை, புதுமை பலர் கேட்க, பார்க்க நடந்தேறினவே. சிலர் நம்பினர். சிலர் வித்தை எனறனர். இயேசு ஏன் மகிமைமிகு நிகழ்ச்சிகளை இரகசியமாக வைத்திருந்தார்... காரணம் கண்களுக்கு விருந்தளிக்கும் காட்சிகளைக் கண்டு மக்கள் சொக்கிப் போகலாம். ஆனால், தொடர் விசுவாசத்திற்கு அழைத்துச் செல்லாது கண் ணால் கண்டு விசுவசிப்பதை விட காணாமலே விசுவசித்து அதனால் வரும் மனமாற்றமே சிறந்தது. புலன்கள் எழுச்சிபெற்று அதனால் வரும் மனமாற்றம் இறைவனுக்கு உகந்ததல்ல. நம் உள்ளங்களை உயர்த்தி ஆண்டவரோடு உறவில் நிலைக்கும் போதுள்ள மனமாற்றமே சிறந்தது. (பிலி. 4:1) இன்று நாம் புலன்களைத் திருப்திப்படுத்த விழா எடுத்து விசுவாசத்தில் வளர ஆசிக்கிறோம். மகிமையை இரகசியமாக வைத்த இயேசு அனைவரும் பார்க்கும்படியாக கேவலமான மரணம் எய்தினார். இதுவும் ஒரு பாடமே. நம் நாட்டு கிறிஸ்தவர்கள் துன்பப்படுவதை உலகமே பார்க்கிறது. இயேசுவைப் போல துனபத்தின் வழி இன்பம். தியாகத்தின் வழி வாழ்வு. இறுதியிலே மகிமை அடைவோம் என்பதைக் காட்டுகிறதல்லவா!

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

# எதிரிகள் மகிழ்ச்சியடைவதற்கு புலிகள் இடம் கொடுக்கக்கூடாது

## கூட்டணித் தலைவர் சங்கரி வேண்டுகோள்

விடுதலைப் புலிகளுக்கிடையில ஏற்பட்ட அபிப்பிராய பேதம் தமிழ் மக்களுக்கு பெருமளவு மன உளைச் சலைத் தருகின்றது என தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.


விடுதலைப்புலிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள அபிப்பிராயபேதம் தொடர்பாக வீ.ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது! அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

விடுதலைப் புலிகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது என்னைப் பொறுத்த அளவில் தப்பாகத் தோன்றினாலும் அதனால் ஏற்படும் பாதிப்பு தமிழ் மக்கள் அனைருக்கும் என்பதால் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் என்ற வகையில் என் கருத்தைத் தெரிவிக்கக் கடமைப பட்டுள்ளேன்.

20 ஆண்டுகளுக்குமேல் பல்வேறு போராட்டங்கள் மூலமும் விடுதலைப் புலிகளின் பெரும் பங்களிப்போடு பேச்சுவார்த்தை மூலம் இறுதித்தீர்வு ஏற்படக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவந்து சாதனை படைத்தவர்கள் விடுதலைப் புலிகள்தான் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் உயிர்த்தியாகத்தோடு கூடிய இப்போராட்டத்தால் மக்களுகத விடிவுகாலம்வரக்கூடிய அறிகுறிகள் தென்படும் இவ்வேளையில் நிலைமையினை உணர்ந்து அபிபபிராய பேதங்களைக் கடந்து விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டால் இப்பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டலாம்.

இவ் அபிப்பிராய பேதம் முக்கியமாக கருதப்படும் வடக்குக் கிழக்கு இணைப்பின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைத்து எதிரிகளை பெரு மகிழ்ச்சிக்குள்ளாக்கும் என்பதை உணர்ந்து உடனடியாக நடந்தவற்றை மறந்து மீண்டும் ஒன்றிணைந்து நாம் எல்லோரும தமிழர் என்ற அடிப்படையில் செயறபடுமாறு புலிகள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)





நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் சில காட்சிகள்.

(படங்கள்: டொறிங்ரன்)

## வடக்குக் கிழக்கு வேட்பாளர்களுக்கு

# பூரண பாதுகாப்பு வழங்க ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கும், சுயேட்சைக்குழு வேட்பாளர்களுக்கும் பூரண பாதுகாப்பு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை, ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஆகியோரின் கொலைகளை அடுத்தே மேற்கண்ட உத்தரவை பொலிஸ்மா அதிபர் இராணுவத்தளபதி ஆகியோருக்கு ஜனாதிபதி விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் மற்றும், ஈ.பி.டி.பி உறுப்பினர் ஆகியோர், இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளமைக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறான கொலைகள் மேலும் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## புலிகளின்...

நடைபெற்ற இப்பத்திரிகையாளர் மாநாட்டில் மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ், தளபதி ராம், துணைத்தளபதி பிரபா, அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் உட்பட விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள பலரும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், சிறப்புத் தளபதி ரமேஷும் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித தனர். இதன்போது அங்கு தெரிவிக்கப்பட்டதாவது,

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து தனியாகப் பிரிந்து செல்ல முயற்சிப்பதானது கருணாவின் தனிப்பட்ட முடிவு. தனிமனிதனான கருணாவின் இம்முடிவு புலிகளின் தலைமையின் அனுமதியில்லாமல் தன்னிச்சையாக எடுக்கப்பட்டது. இதனை அங்குள்ள போராளிகளும், தளபதிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. கிழக்கு மாகாணத்தின் போராளிகளுக்கு தமிழீழ நிர்வாகத் துறையில் முக்கியமான பங்கெதுவும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்திற்குப் பொறுப்பாக இருப்பவர் மட்டக்களப்பைச் சேர்ந்த புதியவன் என்ற போராளி. அதேவேளை, விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர்களில் கருணாவும் ஒருவர். அத்துடன், தலைவர் பிரபாகரனுக்கு அடுத்தபடியான இராணுவத் தளபதியாக கருணாவே செயற்பட்டு வந்தார். இதிலிருந்து கருணாவின் குற்றச்சாட்டு நகைப்புக்கிடமானது என்பது தெளிவாகிறது.

கருணாவின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு தீய சக்திகள் தூண்டுதலாகியுள்ளன. இதனை இப்போது வெளியிட முடியாது. மட்டக்களப்பில் நீதி, நிர்வாக நடவடிக்கைள் சீர்குலைந்துள்ளது என்பது பொய்யானது. அங்கு வேறெநதப் பிரச்சினையும் இல்லை. கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை என்ற கருணாவின் குற்றச்சாட்டு அனைவருக்கும் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியது.

வடக்கு-கிழக்கில் அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதுவே சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டிருக்கின்ற இக்கட்டான நிலைக்குக் காரணம். இது தமிழ் மக்களுக்கும், போராளிகளுக்கும், சர்வதேசத்திற்கும் தெரிந்த உண்மை.

பிரதேசவாதம் ஒன்றை முன் வைத்துச் சுயநலப் போக்கில் செயற்பட முயன்றுள்ளதை இது காட்டுகின்றது. அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக எமது தலைமைப் பீடம் மிகவும் கவலையடைந்திருக்கின்றது, அதிர்ச்சியடைந்திருக்கின்றது. வேண்டுமென்றே ஜனநாயக ரீதியான செயற்பாடுகளைப் பலவீனப்படுத்தும் செயலாக இது அமைந்துள்ளது.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் ஒரு தேர்தலாக இது அமையவேண்டும் என்பதே எமது தலைமைப் பீடத்தின் கண்டிப்பான உத்தரவாகும். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தேசியத் தலைமைக்குக் கட்டுப்பட்டு இலட்சியத்திற்காக உழைப்பவர்கள். எனினும் சில கொள்கையிலும், இலட்சியத்திலும் ஒருசிலர் தவறுவது இயல்பானது. இதனடிப்படையில் கருணாவும் அதற்குள் அடங்குகிறார். இதனைப் புதிய விடயமாகப் பார்க்கவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பின் நீண்ட வரலாற்றில் இப்படியான சம்பவம் இடம்பெற்றதுண்டு. இது விடயத்தில் அதிர்ச்சி என்பதைவிட எமது போராட்டத்தில் இருந்து அவர் அகற்றப் படைவதையிட்டு நிறைவடைகிறேன்.

பல்லாயிரம் போராளிகளின் தியாகத்தால் பொதுநோக்கோடு கட்டியெழுப்பப்படட எமது அமைப்புக்குள் இருக்கும் சுயநல வாதிகள் இனங்காணப் படடு அவர்கள் அகற்றப்படும் சூழ நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதனால், அஙகுள்ள மக்கள், போராளிகள் எமது மக்களின் எதிர்காலம் என்பன காப்பாற்றப்பட்டிருக்கின்றது என்றே நினைக்கின்றேன். தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளுக்கும், சமாதான நடைமுறைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. சமாதான நடவடிக்கைகளை அர்ப்பணிப் போடும் உறுதிப்பாட்டோடும் முன்னெடுப்பதற்கு எமது தலைமை உறுதியாக வுள்ளது. அடுத்தகட்டப் பேச்சுக்களில் புலிகளின் பிரதிநிதிகளைத் தீர்மானிப்பது எமது தலைமைப் பீடமே. எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் தலைவரை அனைவரும் தெளிவாகப் புரிந்திருக்கின்றனர். தவறிழைத்த கருணா தனது தவறுகளை உணர்ந்து திருந்தி வருகிறபொழுது மன்னிப்பு வழங்கத் தலைவர் தயாராக இருக்கிறார். கருணாவை விலக்குவதால், விடுதலைப புலிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. இவ்வாறு செய்தியாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

(த)

## அரசியல் துறைப்...

கள் வன்னிக்குத் திரும்பிக்கொணடிருப்பதாக மட்டக்களப்புச் செய்தியாளரை மேற்கோள்காட்டி நேற்றிரவு பி.பி.ஸி. அறிவித்துள்ளது.

இவர்களின் வெளியேற்றத்தைத் தடுக்கும் வகையில் மட்டக்களப்பு, வாழைசசேனை வீதியில் இளைஞர்கள் சிலர் வாகனங்கள்ள வழி மறித்துச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இது ஒருபுறம் இருக்க, கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்விகற்கும் வடபுலத்து மாணவர்களும் அங்கிருந்து தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருபபதாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ம)

# யாழ்.மடத்தடியில் விபத்து ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மடத்தடியில் நடைபெற்ற விபத்தொன்றில் ஒருவர் மரணமானார். இருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் சைக்கிளும், மோட்டார் சைக்கிளும், மோதியே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தின்போது சைக்கிளில் சென்றுகொண்டிருந்த திருநகரைச் சேர்ந்த ஜோசப்பு ஜோன்சன் (வயது 35) என்பவரே மரணமானவர் ஆவார்

இவர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டபின் அங்கு மரணமானார். இவரது மகனான ஜோன்சன் விருசன் (வயது 2) மோட்டார் சைக்கிளில் சென்ற பாலசிங்கம் புஸ்பகுமார் (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இதேவேளை, படுகாயமடைந்து வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள்ள புஸ்பகுமார் என்பவரிடமிருந்து நூறுகிராம் நிறையுடைய 12 கஞ்சா பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளது. இந்நபர் பல குற்றச் சாட்டுக்களில் ஈடுபட்டு வந்தவர் எனவும் இவரை தாங்கள் தேடிவந்ததாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற ஓட்டுமடத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இறந்தவரின் மரணவிசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். இவரது உடல் பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

சங்குநாதம்
Sankunatham




சங்குநாதம்
வன்முறைகோலோச்சும்
பாராளுமன்றத் தேர்தல்
அடிக்கடி கடிபடும்
அக்காவும் தம்பியும்
எண் சோதிடம்
கல்தூண்கள்
(தொடர்கதை)
மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்
வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்
விலை ரூபா 16.00

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்...